Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 337 | புதன்கிழமை | ஐப்பசி 17 ஆம் நாள் 03 நவம்பர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

# 'ஒரே நாடு ஒரே சட்டம்' செயலணி: பிரிவினையும் ஆபத்துமே ஏற்படும்!

## தமிழ் பேசும் கட்சிகளின் கலந்துரையாடலில் அவற்றின் தலைவர்கள் கூட்டாக எச்சரிக்கை



யாழ்ப்பாணம், நவம்பர் 3

பல் இன, பல் மொழி, பல் மத மக்கள் வாழும் இந்த நாட்டில் 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற கோட்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்காக அமைக்கப் பட்டிருக்கும் ஜனாதிபதி செயலணியானது, மக்களுக்கிடையில் ஒற்றுமையின்மையும் பிரிவினையையும் ஏற்படுத்தக்கூடிய பெரும் ஆபத்தைக் கொண்டுள்ளது. எனவே, அதனை திட்டவட்டமாக நாம் நிராகரிக்கின்றோம்– என்று, தமிழ் பேசும் கட்சிகளின் முக்கியஸ்தர்கள் தெரிவித்த 15 னர்.

## பொதுவாக்கெடுப்பினூடாக தமிழருக்கு அரசியல் தீர்வு!

### நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் கோரிக்கை

கொழும்பு, நவ. 3

"இலங்கைத்தீவில் தமிழ் பேசும் அரசியல் தரப்புகள் ஒருமித்த சக்தியாக ஒருங்கிணைவது வரவேற்கத்தக்கது. ஆனால், தமிழர் தேசத்துக் 15

## கந்தசஷ்டி உற்சவத்தை வீட்டிலிருந்தே தரிசிக்கவும்

*நல்லூர் கோவில் நிர்வாகம் கோரிக்கை*

யாழ்ப்பாணம், நவ. 3

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் கந்த சஷ்டி உற்சவம் நேரலையில் ஒளிபரப்ப 15

## பரீட்சைத் திகதிகள் அறிவிப்பு

. புலமைப்பரிசில்
. உயர்தரம்
. சாதாரணதரம்

கொழும்பு, நவ. 3

2021 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரம், சாதாரண தரம் 15

## புதிய அரசமைப்பு தமிழ், முஸ்லிம்களின் அபிலாஷைகளை திருப்திப்படுத்தவேண்டும்

### யாழில் ஹக்கீம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 3

தமிழ் மற்றும் முஸ்லிம் தரப்பினரின் அரசியல் அபிலாஷைகளைத் திருப்திப்படுத்தக்கூடிய வகையிலேயே புதிய 15

"உப்பிடி நெடுக
திகதியளை
மாத்துறதே
பிள்ளையளுக்கு
பெருஞ்சோதினையா
மாறிட்டு
பாருங்கோ"

முச்சந்தி முரளி



## வீடமைக்க நிதி ஒதுக்கீடு போதாது ஆகக் குறைந்தது ரூ.20 லட்சம் தேவை

பயனாளிகளை கடனாளியாக்குகிறதா அரசு?
பொருள்கள் தட்டுப்பாட்டால் பெரும் இக்கட்டு

யாழ்ப்பாணம், நவ. 3

2021ஆம் ஆண்டு கிராமிய வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கட்டடப் பொருள் கள் தொழில் மேம் பாட்டு அமைச் 15

## இணைந்த வடக்கு- கிழக்கில் சமஷ்டி அதிகாரக் கட்டமைப்பு

### விக்னேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 3


இலங்கைத் தீவில் தமிழ் பேசும் மக்கள் ஒரு தேசத்தவர். வடக்கு -கிழக்கு அவர்களின் மரபு வழித் தாயகம். பராதீனப்படுத்தாத சுயநிர் 15



## கீரிமலையில் கடற்படைக்குத் தாரைவார்க்கும் நிலஅளவீடு எதிர்ப்பால் நிறுத்தம்

யாழ்ப்பாணம், நவ. 3

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கீரிமலை ஜே/226 கிராம அலுவலர் பிரிவிலுள்ள 0.6474 ஹெக்ரேயர் காணிகளை, இலங்கைக் கடற்படைக்குத் தாரைவார்க்கும் 11



## அரிசிக்குத் தட்டுப்பாடா? மரவள்ளி சாப்பிடுங்கள்

*சமல் ராஜபக்சவின் ஆலோசனை இது*

கொழும்பு, நவ. 3

நாட்டில் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படும்போது, கடந்த காலங்களில் கிராமங்களில் மரவள்ளிக்கிழங்கு, பாசிப்பயறு போன்றவற்றை உண்டனர் என்று நீர்ப்பாசன 15

## பாரம்பரியத்தை கைவிடும் புதிய பாதீடு

கொழும்பு, நவ. 3

பாரம்பரிய வரவு – செலவுத் திட்டத்துக்கு அப்பால்சென்று புதிய பார்வை மற்றும் திட்டங்களுடனான 11



# வடக்கில் தொற்று கட்டுப்பாட்டுக்குள்

## தீபாவளிக் கொத்தணிக்கு இடமளித்துவிடாதீர் வடக்கு சுகாதாரப் பணிப்பாளர் அறிவுறுத்து



**யாழ்ப்பாணம், நவ. 3**
**வடக்கில் கொரோனாத்தொற்று தற்போது படிப்படியாக குறைந்து கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது. எனினும், கடந்த புதுவருடத்தின் போது ஏற்பட்ட கொரோனாக்கொத்தணி தற்போது வரை பாதிப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், இந்த முறை தீபாவளிப் பண்டிகை நாள்களில், பொதுமக்கள் மிக அவதானமாக, சுகாதார முறைகளைப் பின்பற்றி செயற்படவேண்டும்.**

இவ்வாறு, வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

தற்போதைய கொரோனா நிலைமைகள் தொடர்பாக ஊடகங்களுக்கு நேற்றுக் கருத்துத்தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தீபாவளிப் பண்டிகை நாள்களில் பொது மக்கள் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

இதுவரை வடக்கு மாகாணத்தில் 38 ஆயிரத்து 850 பேர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். அதேபோல 833 பேர் கொரோனாத்தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

வடக்குமாகாணத்தில் 30 வயதுக்கு மேல் 5 லட்சத்து 72 ஆயிரத்து 933 பேர் முதல் டோஸையும் 4 லட்சத்து 91 ஆயிரத்து 201 பேர் இரண்டாவது டோஸையும் பெற்றுள்ளனர். அதேபோல வடக்கு மாகாணத்தில் 20 தொடக்கம் 30 வயதுக்கு உட்பட்டவர்களில் முதல் டோஸை ஒரு லட்சத்து 18 ஆயிரத்து 820 பேரும் இரண்டாவது டோஸை 47 ஆயிரத்து 543 பேரும் பெற்றுள்ளனர்.

வடமாகாணத்தில் 16 தொடக்கம்19 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களில் 43 ஆயிரத்து 034 பைஸர் தடுப்பூசியை பெற்றுள்ளனர். அதேபோல 12 தொடக்கம்19 வயதுக்குட்பட்ட விசேட தேவை மற்றும் நாள்பட்ட நோய்களுக்குள்ளான 535 பேருக்கும் தடுப்பூசி ஏற்றப்பட்டது.

வடக்கில் சுகாதாரத் திணைக்களப் பணியாளர்களுக்கான பூஸ்டர் தடுப்பூசி வழங்கும் பணி இன்று புதன்கிழமை தொடக்கம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையிலும், மாவட்ட பொது மருத்துவமனைகளிலும் ஆதார மருத்துவமனைகளிலும் இடம்பெறும். சுகாதார மருத்துவ அதிகாரிகள் பணிமனையில் வேலைசெய்யும் பணியாளர்களுக்கு அங்கேயே தடுப்பூசி செலுத்தும் பணி இடம்பெறும். வடக்கு மாகாணத்தில் பத்தாயிரம் சுகாதாரப் பணியாளர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் பணி இடம்பெறவுள்ளது- என்றார். (து-20)

# கொரோனா சாவு 10 572 பேருக்குத் தொற்று

கொழும்பு, நவ. 3
இலங்கையில் நேற்று 572 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதற்கமைய நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 42 ஆயிரத்து 211 ஆக அதிகரித்துள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் நாட்டில் மேலும் 448 பேர் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர். அதன்படி இதுவரை 5 இலட்சத்து 13 ஆயிரத்து 540 பேர் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர்.

இதேவேளை,
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 10 பேர் உயிரிழந்துள்ளனர். சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் அசேல குணவர்த்தன இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் 5 ஆண்களும், 5 பெண்களும் அடங்குகின்றனர்.

இதற்கமைய நாட்டில் இதுவரையில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 770 ஆக அதிகரித்துள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (து-22)

# ஊவா மாகாண பாடசாலைகளுக்கு தீபாவளி விடுமுறை

பசறை, நவ. 3
தீபாவளிப் பண்டிகையையொட்டி, ஊவா மாகாணத்திலுள்ள அனைத்து தமிழ் மொழி மூலப் பாடசாலைகளுக்கும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

ஊவா மாகாண ஆளுநர் ஜே.எம்.முஸம்மில்லின் விசேட பணிப்புரைக்கு அமைய இந்த விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

குறித்த விடுமுறை தினத்துக்குரிய பதில் பாடசாலை எதிர்வரும் 13ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (து-இ)

### சுன்னாகம் தபால் நிலையம்

# முறைகேடு எதுவும் நடக்கவில்லையாம்

## சந்தேகங்களுக்கு பதிலின்றி இப்படிச் சொல்கிறார் மாவட்டச் செயலர் க.மகேசன்

யாழ்ப்பாணம், நவ. 3
சுன்னாகம் தபால் நிலையக் கட்டுமானம் தொடர்பில் 'உதயனில்' வெளிவந்த தொடர் ஆக்கங்களில் கூறப்பட்ட விடயங்கள் யாவும் பொய்யானவை என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்த அறிக்கை வருமாறு :-

உதயன் பத்திரிகையில் 2019ஆம் ஆண்டு நடைபெற்ற, சுன்னாகம் தபால் நிலைய நிர்மாண வேலை தொடர்பாக 22, 23 மற்றும் 25.10.2021 திகதிகளில் பிரசுரிக்கப்பட்ட செய்திக்கட்டுரையானது உண்மைக்கு புறம்பானதும் புனையப்பட்டதும் மற்றும் ஊகங்களின் அடிப்படையிலும் தங்கள் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளதை மனவருத்தத்துடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மேலும் இந்தவிடயம் திட்டமிடப்பட்ட வகையில் ஒரு தலைப்பட்சமாக மாவட்ட செயலகத்துக்கும் மாவட்ட செயலருக்கும் அவதூறு ஏற்படுத்தும் வகையில் பிரசுரிக்கப்பட்டதாகவே கருத வேண்டியுள்ளது. அத்துடன் பகிரங்க அக்கறை கொண்டுஇந்தவிடயம் பிரசுரிக்கப்பட்டிருப்பின் மாவட்ட செயலகத்துக்கு இந்தவிடயம் தொடர்பாக தமது நிலைப்பாட்டை தெரியப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருக்க வேண்டும் அல்லது விசாரித்து உண்மைத்தன்மையை அறிந்திருக்க வேண்டும்.

மேற்படி நிர்மாண வேலையானது ஒப்பந்தத்தின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்துடன் முடிவுறுத்தப்பட்டதாக நல்லெண்ண அடிப்படையில் தெரிவிக்கப்பட்டிருந்ததுடன் அந்த ஒப்பந்தம் தொடர்பாக உறுதிச்சிட்டைகள் கைவசம் உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், பல்வேறு தவிர்க்க முடியாத காரணங்களால் அந்தக்காலப்பகுதியில் முடிவுறுத்த முடியவில்லை என அவதானிக்க கூடியதாக இருந்தது.

அந்தக்காலப்பகுதியில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை தீர்க்கப்படாமை காரணமாக இவ்விடயம் தொடர்புடைய அதிகாரிகள் மட்டத்தில் கலந்துரையாடப்பட்டு பௌதிக ரீதியாக முடிவுறுத்தப்பட்ட வேலைக்கு மாத்திரம் உரிய நிதிப்பிரமாணம் மற்றும் அரச சுற்றறிக்கைக்கமைய கொடுப்பனவு வழங்கப்பட்டது. இவ்விடயம் முற்று முழுதாக கணக்காய்வுக்குட்படுத்தப்பட்டதுமாகும்.

இவ்விடயம் தொடர்பாக எந்தவித முறைகேடுகளும் இடம்பெறவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்வதுடன் இந்த வெளிப்படையான விசாரணைகளையும் எதிர்கொள்வதற்கு மாவட்ட செயலகம் தயாராக உள்ளதுடன் இவ்விடயத்தை தங்களின் பத்திரிகையில் பிரசுரிக்கும் பட்சத்தில் நன்றியுடையவனாவேன் என்பதையும் தயவுடன் அறியத்தருகிறேன் -என்றுள்ளது.

**ஆசிரியர் குறிப்பு:**
தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாகப் பெறப்பட்ட தகவல்கள், கணக்காய்வு அறிக்கை, அதற்கு மாவட்டச் செயலகத்தால் வழங்கப்பட்டபதில் என்ற எழுத்துமூலமான ஆதாரங்களின் அடிப்படையிலேயே எந்தப் புனைவுமின்றி கட்டுரையானது எழுதப்பட்டது.

அந்தக் கட்டுரையில் பல்வேறு சந்தேகங்கள் ஆதாரங்களுடன் எழுப்பப்பட்டிருந்தன. மாவட்டச் செயலர் க.மகேசன், அவை எவற்றுக்கும் பதில் வழங்கவில்லை. பொத்தம்பொதுவாக 'முறைகேடு இடம்பெறவில்லை', 'உண்மைக்குப்புறம்பானது', 'ஊகங்களின் அடிப்படையில் எழுதப்பட்டுள்ளது' என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால், கட்டுரையில் ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டப்பட்ட 'தில்லுமுல்லுகள்' தொடர்பில் எந்தப் பதிலும் வழங்காமல் நழுவியிருக்கின்றார்.

மாவட்டச் செயலர் கூறுவதைப்போன்று எந்த முறைகேடுகளும் இடம்பெறாமல் இருந்திருந்தால் இன்று அந்தக் கட்டடம், அதன் அமைக்கப்பட்ட நோக்கத்துக்கு அமைவாக மக்களுக்கு சேவை வழங்கியிருக்கவேண்டுமல்லவா? இந்தக் கணம் வரையில் அது நடைபெறவுமில்லை. அதனை நடைபெறச் செய்வதற்கான ஏற்பாடுகளும் இல்லை. உதயன் சொல்வது பொய்யா அல்லது மாவட்டச் செயலர் மகேசன் உண்மையை மறைக்க முயல்கின்றாரா என்பதை மக்கள் இதன் அடிப்படையில் தீர்மானித்துக்கொள்வார்கள். (ஆ-ர்)

# வடமாகாணத்தின் வயது முதிர்ந்த மூதாட்டி நேற்றுக் காலமானார்



முல்லைத்தீவு, நவ. 3
வடமாகாணத்தின் வயது முதிர்ந்த மூதாட்டி என்று கருதப்படும் பெர்னாண்டோ மாகிறேற் நேற்றுக் காலமானார். அவருக்கு வயது 109.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அளம்பிலில் இன்று இடம்பெறவுள்ளன. (ம)

# பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆளுநர் அலுவலகம் முன் போராட்டம்

**யாழ்ப்பாணம், நவ. 3**

**தேசிய வீடமைப்பு அதிகார சபையால் 2019ஆம் ஆண்டு வழங்கப்பட்ட வீட்டுத் திட்டத்தை பூர்த்தி செய்யுமாறு கோரியும், இரசாயன உரங்கள் மற்றும் கால்நடைத் தீவனங்களின் விநியோகத்தைச் சீர்ப்படுத்துமாறு வலியுறுத்தியும் வடமாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

முன்னாள் வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினர் வ.பிரபாகரன் தலைமையில் வலி.வடக்கு பிரதேசத்தைச் சேர்ந்த மக்களால் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஆர்ப்பாட்டக்காரர்கள் தமது கோரிக்கைகளை வலியுறுத்தி மனுவொன்றை வடமாகாண ஆளுநர் ஊடாக பிரதமருக்கு வழங்கிவைத்தனர். (ம-20)



# காலநிலை நெருக்கடியை சமாளிப்பதற்கு உதவிகள்

## *ஜனாதிபதி கோத்தாபய கோரிக்கை*

கொழும்பு, நவ.3

உலகில் பெருமளவில் பச்சைவீட்டு வாயுக்களை வெளியிடுபவர்கள், தங்கள் தேசிய கடமைகளை நிறைவேற்றுவது போன்றே, காலநிலை நெருக்கடியை சமாளிப்பதற்கான உதவிகளை அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு வழங்குவது அவசியம்.

இவ்வாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் காலநிலை மாற்றங்கள் தொடர்பான மாநாட்டில் உரையாற்றும்போதே ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பொதுச் சுகாதாரப் பிரச்சினைகள், நீர் மாசடைதல், மண்ணரிப்பு மற்றும் உயிர்ப் பன்முகத் தன்மைப் பாதிப்புக்கள் காரணமாக, இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லிகள் மற்றும் களைக் கொல்லிகளை இறக்குமதி செய்வதற்கு இலங்கை அண்மையில் தடை விதித்தது. பல்வேறு குழுக்கள் இதனை எதிர்த்தாலும், எதிர்காலத்தில் ஆரோக்கியமான மற்றும் மிகவும் நிலையான சேதன விவசாயத்துக்காகவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதன்மூலம் புத்தாக்கம் மற்றும் முதலீட்டுக்கான வாய்ப்புகள் உருவாக்கப்படும்.

இலங்கையானது, காலநிலை மாற்றத்தின் பாதிப்புக்கள் தொடர்பாக ஆழமாக அறிந்துள்ளது. புத்த பெருமானின் போதனைக்கு அமைய போஷிக்கப்பட்டுள்ள எமது கருத்தியல் சார் உரிமையானது, சுற்றாடலின் இருப்புக்கு அதிக பெறுமதியை வழங்குகின்றது. அதனால்தான், எமது தேசிய கொள்கைக் கட்டமைப்பின் இதயமாக நிலைத்தன்மை விளங்குகின்றது.

இலங்கையின் கொள்கையானது, 2050ஆம் வருடம் ஆகும்போது காபன் உதாசீனத்தை அடைவதற்காக, காபன் உமிழ்வைக் குறைக்கும் நோக்கத்தைக் கொண்டுள்ளது. புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களின் பங்களிப்புடன், 2030 ஆம் ஆண்டளவில் தேசிய எரிசக்தி தேவையில் 70 சதவீதம் பூர்த்தி செய்யப்படும் என எதிர்பார்ப்பதோடு, படிம எரிபொருள்களின் பயன்பாட்டைப் படிப்படியாக நிறுத்தவும் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

2030ஆம் ஆண்டுக்குள் நமது காபன் ஒதுக்கீட்டுத் திறனை 7 சத வீதமாக அதிகரிப்பதற்கான முயற்சிகளை செயற்படுத்தும் நிலையான நைதரசன் முகாமைத்துவம் தொடர்பான கொழும்பு பிரகடனத்துக்கு 2019ஆம் ஆண்டில் இலங்கை தலைமைத்துவம் வழங்கியிருந்தது. இந்த வேலைத் திட்டத்தில் மேலும் பல நாடுகள் இணையுமென்று எதிர்பார்க்கின்றோம் - என்றார். (எ-இ)

# நிர்வாக அலகுகளுக்கு எதிரானது 'ஒரு நாடு: ஒரு சட்டம்' செயலணி

## *ரெலோ விளக்கம்*

யாழ்ப்பாணம், நவ. 3

தமிழ்த் தேசிய கட்சிகள் கூறிவருகின்ற சுயாட்சி, தன்னாட்சி, கூட்டாட்சி, கூட்டு சுயாட்சி, 'ஒரு நாடு இரு தேசம்' அல்லது மாகாண சபைகள் எவையும் இருக்க முடியாது என்ற செய்தியை ஜனாதிபதியினால் உருவாக்கப்பட்ட 'ஒரு நாடு: ஒரு சட்டம்' செயலணி சொல்கின்றது என்று ரெலோ அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

அரசியல் தீர்வுக்கான பரிந்துரைகளை அரசிடம் சமர்ப்பித்து விட்டாயிற்று. அரசோ மரியாதைக்குத்தன்னும் அழைத்துப் பேசுவதாக இல்லை. பல கடிதங்கள், கோரிக்கைகள் அனுப்பியும் அரசாங்கம் செவி கொடுக்கவில்லை. மாறாக புலம்பெயர் அமைப்புகளோடு பேச்சுக்கு தயார் என்று அறிவித்திருக்கிறது. சர்வதேச ஆதரவுமூலம் அல்லது பூகோள நகர்வுகளின் மூலம் அரசியல் தீர்வு வந்து தமிழ் மக்கள் மடியில் விழுந்துவிடும் என்று கனவில் மிதப்பதாக இருக்கிறது. பூகோள அரசியல் நகர்வுகளை மேற்கொள்வதாகவும் இல்லை.

எந்த சர்வதேச நகர்வுகளும் இந்தியாவைத் தாண்டி இலங்கையில் நடைபெற முடியாது என்பது பட்டறிந்த யதார்த்தம். எல்லா சர்வதேச நாடுகளும் எமது பிரச்சினைகளை செவிமடுத்தாலும் இறுதியில் இந்தியாவையே கருத்துக் கேட்பார்கள்.

இந்த நிலையில் அரசு மிகத் தந்திரமாக தன்னுடைய காய்களை நகர்த்தி வருகிறது. மாகாணசபை தேர்தல்களை நடத்துவதாக அறிவித்துள்ளது. அரசின் தமிழினத்துக்கு எதிரான பௌத்த பேரினவாத புதிய அரசியல் யாப்பு, திட்டமிட்ட காணி அபகரிப்பு, சிங்கள குடியேற்றத்தின் மூலம் இனக் குடிப் பரம்பலை சிதைப்பது, புதிய தேர்தல் முறைமையின் ஊடாக பிரதிநிதித்துவத்தைக் குறைப்பது, எல்லை மீள் நிர்ணயத்தின் மூலம் எல்லைகளை மாற்றுவது, 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற திட்டத்தை நடைமுறைப்படுத்தி எதிர்கால அரசியல் கோரிக்கைகளை ஒட்டுமொத்தமாக தடுத்து நிறுத்துவது போன்ற நடவடிக்கைகளை முன்னெடுக்கிறது. இதைத் தடுத்து நிறுத்த இந்தியாவின் ஆதரவைக் கோரும் எமது அரசியல் நகர்வினை விமர்சிக்க முற்படுபவர்கள் தெரிந்தோ - தெரியாமலோ அரசின் நிகழ்ச்சி நிரலை அங்கீகரிப்பதாக அமையும் என்றுள்ளது. (ம)




**சலமோன் மன்னனிட்ட ஒரு பிள்ளைக்கு ரண்டு தாய்மார் உரிமை கோரின கதை உங்களுக்குத் தெரியும் தானே. இப்ப அதை மாதிரி ஒரு விசயத்துக்கு ரண்டு தரப்பு உரிமைகோருகினம். என்ன சிக்கல் எண்டால் இந்த ரண்டு தரப்பும் தங்கட பக்கத்தில சரியான நியாயம் வைச்சிருக்கினம். அதால எந்தப் பக்கம் தீர்ப்புக் குடுக்கிறது எண்டு ஒருத்தருக்குமே தெரியேலை. இனியும் சுத்திவளைக்காமல் விசயத்துக்கு வருவம்.**

**கோப்பாய் கல்வியியல் கல்லூரி இப்பிடி பேரோடையும் புகழோடையும் இருக்கிறதுக்கு காரணம் அதின்ர முதலாவது பீடாதிபதியா இருந்த கமலநாதன் சேர்தான் எண்டு எல்லாருமே கண்ணை மூடிக்கொண்டு சொல்லுவினம். அந்தளவுக்கு கல்வியியல் கல்லூரியை நேசிச்ச ஆள் அவர். ஒவ்வொரு துறையையும், ஒவ்வொரு மாணவரையும் செதுக்கி, கோப்பாய் கொலிஜ் ஒப் எடியூகேசன்ல இருந்து வந்தால் கம்பஸில படிச்சு வந்தவையை விடவும் நல்லாப் படிப்பிப்பினம்' எண்டு சொல்லுற அளவுக்கு அந்தக் கல்லூரிக்கு ஒரு நல்லபேர் கிடைக்க கமலநாதன் சேர்தான் அடிப்படைக் காரணம். மற்றவை எல்லாம் பெஞ்சன் எடுத்தவுடன, அதுக்குப் பிறகு தங்கட கடமை முடிஞ்சுது எண்டு முந்தி வேலை செய்த இடங்களை எட்டியும் பாக்காயினம். ஆனால் இவர் இப்ப வெளிநாட்டில இருந்தாலும் கூட, பீடாதிபதியா இருக்கேக்க எப்பிடியெல்லாம் இந்தக் கோப்பாய் கல்வியியல் கல்லூரிக்காக பாடுபட்டாரோ , அதைவிடவும் கூடுதலா இப்ப அக்கறை காட்டுறார். அவர் வெளிநாட்டில இருந்தாலும் கூட, அவரின்ர நினைப்பும், மனசும் கோப்பாய் கல்வியியல் கல்லூரியைத் தான் சுத்திச் சுத்தி வருகுதாம்.**

**அந்தளவுக்கு கல்லூரியை ஒவ்வொரு அணுவணுவா செதுக்கி, இப்படித் தலைநிமிர வைச்ச அந்தத் தலைமகனுக்கு ஏதாவது கௌரவம் செய்ய வேணுமெண்டு அங்க படிச்சவையும், படிப்பிச்சவையும் நினைச்சு, 'கல்வியியல் கல்லூரியின் ஸ்தாபகர்' எண்டு அவருக்கு பட்டமும் குடுத்து சிலையும் வைக்க விரும்பியிருக்கினம். இந்த விசயம் இன்னொரு தரப்புக்கு போயிருக்கு. அவை வேற ஆருமில்லை, சித்தார்த்தன் எம்.பி தரப்புத்தான். எப்பிடி இந்தக் கோப்பாய் கல்வியியல் கல்லூரிக்கு தன்ர ஆளுமையால கமலநாதன் சேர் உயிர் குடுத்தாரோ அதேமாதிரி கல்வியியல் கல்லூரிக்கு உடல் மாதிரி இருக்கிற அந்தப் பென்னம்பெரிய காணியை ஒரு சல்லிக் காசு கூட வாங்காமல் , தன்ர அப்பா தர்மலிங்கம் எம்.பியின்ர பேரால குடுத்தவர்தான் சித்தார்த்தன் எம்.பி. அவையின்ர பரம்பரைக் காணியை இப்பிடி ஒரு நல்ல காரியத்துக்காக அள்ளிக் குடுக்க எல்லாருக்கும் மனசு வராது. ஆனால் தர்மலிங்கத்தார் குடும்பத்தில எல்லாருக்கும் அந்த தர்மகுணம் நிறையவே இருக்கு. அதால கல்வியியல் கல்லூரி கட்ட காணி இல்லாம அந்தரப்பட்டுக் கொண்டு திரியேக்க, 'இந்தாங்கோ எங்கட காணியில கட்டுங்கோ' எண்டு எந்தப் பிரதிபலனும் பாக்காமல் தர்மலிங்கத்தார் குடும்பம் குடுத்தது. அவை காணி குடுக்காட்டி சிலவேளை வேற மாவட்டங்களுக்குக்கூட இந்தக் கல்லூரி போயிருக்கலாம். அதால கல்வியியல் கல்லூரி உருவாக ஆதாரமா இருந்து, காணியைக் குடுத்த தங்கட அப்பா தர்மலிங்கத்தைத்தான் ஸ்தாபகர் எண்டு சொல்லோணும் எண்டது அவையின்ர குடும்பத்தின்ர வாதம். கிட்டத்தட்ட கோழியில இருந்து முட்டை வந்ததா? முட்டையில இருந்து கோழி வந்ததா? எண்டமாதிரிப் போட்டுது நிலைமை. இப்ப ஸ்தாபகர் எண்ட சொல்லுத்தான் பிரச்சினை. அரசாங்கம் கொண்டு வந்த ஒரு கல்லூரிக்கு பீடாதிபதியையோ, காணி குடுத்தவரையோ ஸ்தாபகர் எண்டு சொல்லவே ஏலாது எண்டு இன்னொரு தரப்பு சொல்லுது.**

**கமலநாதன் சேரும், தர்மலிங்கத்தார் குடும்பமும் இல்லாட்டி கோப்பாய் கல்வியியல் கல்லூரி உருவாகியிருக்கவோ இல்லாட்டி இந்தளவு பேரும் புகழோடையும் நிமிர்ந்திருக்கவோ முடியாது. அதுதான் உண்மை. அதால 'ஸ்தாபகர்' எண்ட ஒற்றைச் சொல்லுக்க அவையின்ர பெருந்தன்மையைக் குறுக்காமல் 'கல்லூரித் தந்தையர்' அப்பிடி ஏதும் பொதுவான அடையாளத்தை ரண்டுதரப்பும் சேர்ந்து உருவாக்கினால் பிரச்சினை வராதெல்லோ.**

**ஏதோ பட்சி மனசில பட்டதை சொல்லியிருக்கு. இனி முடிவெடுக்க வேண்டியது பெரியாக்களின்ர கையில.**



- பட்சி

## ஒக்ரோபரில் மட்டும் வடக்கில் 2,612 பேருக்குக் கொரோனா

யாழ்ப்பாணம், நவ.3
வடக்கு மாகாணத்தில் ஒக்ரோபர் மாதத்தில் 2 ஆயிரத்து 612 பேர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். 71 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதாரத் திணைக்களத் தகவல்கள் தெரிவித்தன.

உயிரிழந்தவர்களில் 44 பேர் யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், 14 பேர் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 74 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த மாதத்தில் மட்டும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 865 பேரும், வவுனியா மாவட்டத்தில் 703 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 654 பேரும், மன்னார் மாவட்டத்தில் 273 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 117 பேரும் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 44 பேரும், வவுனியா மாவட்டத்தில் 14 பேரும், கிளிநொச்சியில் 9 பேரும் முல்லைத்தீவில் 4 பேரும் கொரோனாத் தொற்றால் இறந்துள்ளனர். அதேவேளை, கடந்த ஆண்டு மார்ச் மாதம் முதல் தற்போதுவரை வடக்கு மாகாணத்தில் 833 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர். (எ-இ)


# அமெ. சிறப்புப் பயிற்சி பெற்றவர் திகனவில் துப்பாக்கியுடன் கைது!

## விசாரணைகள் தீவிரம்

கொழும்பு, நவ.3
**துப்பாக்கி, துப்பாக்கி ரவைகள் மற்றும் தொலைத்தொடர்பு சாதனங்களுடன் கண்டி, திகன பகுதியில் கைது செய்யப்பட்ட அமெரிக்கக் கடற்படையின் முன்னாள் சிப்பாய் உட்பட இருவரை எதிர்வரும் 15ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைத்தது நீதிமன்றம்.**

சந்தேகநபர்கள் இருவரும் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டனர். பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றுக்கு அமைய திகன பகுதியில் உள்ள சொகுசு குடியிருப்புத் தொகுதி சுற்றி வளைக்கப்பட்டு, சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். அதிக வலுக்கொண்ட மோட்டார் சைக்கிள்கள் பொருத்தப்படுகின்றன என்றே பொலிஸாருக்குத் தகவல் கிடைத்திருந்தது. சுற்றிவளைப்பு நடத்திய பொலிஸார், சந்தேகநபர்களிடம் இருந்து துப்பாக்கி ரவைகள், ரம்போ வகைக் கத்திகள், துப்பாக்கிகளுக்குப் பயன்படுத்தப்படும் தொலைநோக்கி, துப்பாக்கி, தொலைத்தொடர்பு சாதனங்கள் என்பவற்றையும் கைப்பற்றியுள்ளனர். அதே வேளை, இலக்கத்தகடற்ற இரு மோட்டார் சைக்கிள்கள், இலக்கத் தகடுகளுடன் 4 மோட்டார் சைக்கிள்கள், அமெரிக்காவில் பயன்படுத்தப்படும் வாகன இலக்கத் தகடு, ஒரு கடவுச் சீட்டு, 7 இலட்சம் ரூபா பணம் என்பனவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்டவர்களில் 44 வயதான சமிந்த அலோசியஸ் பண்டார என்பவர் அமெரிக்க கடற்படையில் பணியாற்றியவர் என்று விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. 2004ஆம் ஆண்டு முதல் கடந்த ஜனவரி மாதம்வரை அமெரிக்கக் கடற்படையின் வி.எவ்-143 பிரிவில் இவர் கடமையாற்றியிருக்கிறார். வர்ஜீனியாவில் உள்ள வி.எவ்-143 படையணி விசேட தாக்குதல் பயிற்சி பெற்ற சிப்பாய்களைக் கொண்ட பிரிவாகும். தெஹிவளை, அத்தியடிய பகுதியை நிரந்தர முகவரியாகக் கொண்ட இவர், திகனவில் வாடகை வீடொன்றில் தங்கியிருந்துள்ளார். மற்றைய சந்தேகநபரான டெரன்ஸ் மரியோ பெரேரா, குற்றச்செயல்கள் காரணமாக கனடாவில் இருந்து நாடு கடத்தப்பட்டவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். இவர் நாவலவை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர். சந்தேகநபர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட துப்பாக்கி ரவைகள் 45 ஏ.சி.பி வகைத் துப்பாக்கிகளுக்கு உரியவை என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தத் துப்பாக்கி அமெரிக்க இராணுவம் பயன்படுத்தும் துப்பாக்கி வகையைச் சேர்ந்தது என்றும் கூறப்படுகின்றது. சந்தேகநபர்கள் இருவரும் தெல்தெனிய மாவட்ட நீதிவான் எல்.ஜே.வி.பெர்னாண்டோவிடம் முற்படுத்தப்பட்டபோது, சந்தேகநபர்களை எதிர்வரும் 15ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். இந்தச் சம்பவம் தொடர்பாக பகிரங்க விசாரணை ஒன்றை முன்னெடுக்க வேண்டும் என்றும் பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டார். பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட துப்பாக்கி ரவைகளை அரச இரசாயனப் பகுப்பாய்வுக்கு அனுப்பி, அதன் அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்கவேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது. (எ-இ)

# யாழ்ப்பாணம்-கொழும்பு ரயில் சேவை ஆரம்பம்!



யாழ்ப்பாணம் -கொழும்பு ரயில் சேவை இன்று புதன்கிழமை மாலை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதன்படி இன்று புதன்கிழமை கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து மாலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் புறப்படும் ரயில், மறுநாள் வியாழக்கிழமை மாலை 6.10 மணிக்கு யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் புறப்படும். மறுஅறிவித்தல்வரை யாழில் இருந்து கொழும்புக்கு ஒரு சேவையும் கொழும்பில் இருந்து யாழுக்கு ஒரு சேவையுமே முன்னெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# கர்ப்பிணிகளை சேவைக்கு அழைப்பதற்கு அரசு முடிவு

கொழும்பு, நவ.3
கர்ப்பிணிகளை மீண்டும் அரச சேவைக்கு அழைப்பது தொடர்பில் ஆலோசிக்கப்படுகின்றது என்றும், சில வரையறைகளுக்கு உட்பட்டு அவர்கள் சேவைக்கு அழைக்கப்படுவார்கள் என்றும் அரச நிர்வாக அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது;
கர்ப்பிணிகளை சேவைக்கு அழைப்பது சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களின் தேவைக்கு அமைய மேற்கொள்ளப்பட வேண்டும். சில நிறுவனங்களை நடத்திச் செல்வதில் ஏற்பட்டுள்ள சிக்கல்களை கவனத்தில் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பான சுற்றறிக்கை இதுவரை வெளியிடப்படவில்லை. அமைச்சுக்கள் மட்டத்தில் நடத்தப்படும் மக்கள் தினத்தை வரையறைகளுடன் நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேவைக்கு அமைவான திகதி மற்றும் நேரத்தை ஒதுக்கிய பின்னர், அமைச்சின் அதிகாரிகளை சந்திக்க மக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். -என்றார்.

அதேவேளை, நாட்டில் கொரோனாத் தொற்று அபாயம் இன்னமும் குறையவில்லை, பணியாளர்கள் வீடுகளில் பணியாற்றும் நடைமுறையைத் தொடர்வதே பொருத்தமானது என்று சுகாதாரத் தரப்பினர் தெரிவித்து வருகின்றனர். (எ-இ)

## ஜெனிவாத் தீர்மானத்தையே நிராகரித்து

# பாதுகாத்த நாட்டை ஒருபோதும் காட்டிக்கொடுக்கவே மாட்டோம்!



கொழும்பு, நவ. 3
'ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டிருந்த தீர்மானத்தை நிராகரித்து, பாதுகாத்த நாட்டை ஒருபோதும் காட்டிக்கொடுக்கமாட்டோம். அத்துடன், நெருக்கடியான சூழ்நிலைகளின்போது எம்முடன் இணைந்து பயணிப்பவர்களை ஓரங்கட்டக்கூடாது. கூட்டணி அரசில் ஐக்கியத்தை பாதுகாக்கவேண்டிய பொறுப்பு பிரதானக் கட்சிக்கே இருக்கின்றது' இவ்வாறு பொஜன பெரமுனவின் தலைவரும், பிரதம அமைச்சருமான மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், 'எவ்வாறான அழுத்தங்கள் வந்தாலும் ஜனநாயகத்தின்மீது நம்பிக்கை வைத்து செயற்படவேண்டும். ஆட்சி அதிகாரம் எம்மிடம் இருந்தாலும் மக்கள் மத்தியில் சென்று அரசியல் நடத்த வேண்டும். அவர்களால் தெரிவிக்கப்படும் கருத்துகளை செவிமடுக்க வேண்டும். மக்களின் குரல் எமது காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்க வேண்டும். எம்மவர்கள் மக்கள் மத்தியில் செல்லாததாலேயே ஆசிரியர்களின் போராட்டம், விவசாயிகளின் போராட்டம் என்பன நீடித்தன.

வாக்களித்த மக்கள் நெருக்கடியான சூழ்நிலையிலேயே உள்ளனர். சில வேளை செய்யாத தவறுக்குக்கூட அவர்கள் அரசை விமர்சிக்கலாம். ஆனாலும் நாம் மக்களைத் தேடிச் செல்ல வேண்டும். ஹெப்பட்டிபொலவில் குண்டு வெடித்தபோது, சம்பவ இடத்துக்கு நான் சென்றேன், மக்கள் குறை கூறினார்கள். அழுதார்கள். தேசிய பாதுகாப்புக்கான பொறுப்பை நான் ஏற்றேன். பேருவளை சம்பவம், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் போன்ற சம்பவங்களின் பின்னரும் களத்துக்குச் சென்றேன்.

அதேவேளை, சமாதானத்துக்கு நேசக்கரம் நீட்டும் கட்சியாக எமது கட்சி இருக்க வேண்டும். சுதந்திரக் கட்சியானது இடதுசாரி கட்சிகளுடன் இணைந்து செயற்பட்டது. பொதுஜன பெரமுனவும் இதுகுறித்து கவனம் செலுத்த வேண்டும். சில கட்சிகளுக்கு நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் இல்லாமல் இருக்கலாம். சில கட்சிகள் சிறிய கட்சிகளாக இருக்கலாம். மேலும் சில கட்சிகள் பெரிய கட்சிகளாக இருக்கலாம். இங்கு சிறிய கட்சி, பெரிய கட்சி என்பது முக்கியமல்ல, நோக்கம்தான் மிக முக்கியம்' -என்றார். (மு-44)

# உரப் பிரச்சினையே இல்லை: விவசாயிகள் கூறுவது பொய்!

## அடித்துக் கூறுகின்றது அரசு



**கொழும்பு, நவ.3**

**உர பிரச்சினையால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்று கூறப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன 2019ஆம் ஆண்டு பின்கதவின் ஊடாகத் தப்பிச் சென்றார். அவரது கருத்துக்களை மக்கள் ஏற்கமாட்டார்கள் என்று மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.**

பொலநறுவையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

2016 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பொதுஜன பெரமுன கட்சி, குறுகிய காலத்துக்குள் இரண்டு பிரதான அரசியல் கட்சிக்ளையும் வீழ்த்தி 2018ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெற்றி பெற்றது. ஜனாதிபதி தேர்தலிலும், 2020ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலிலும் கட்சி அமோக வெற்றி பெற்றது. 2020ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை கொரோனா பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட பலம்பொருந்திய நாடுகள் கொரோனாத் தாக்கத்தால் பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ள நிலையில் அரசு, நாட்டு மக்களை கொரோனாத் தாக்கத்திலிருந்து பாதுகாத்துள்ளது. 2019ஆம் ஆண்டின் இறுதிக்காலாண்டின்போது ஆட்சியதிகாரத்தை பொறுப்பேற்றோம். அப்போது பொருளாதார வளர்ச்சி 2.7வீதமாகக் காணப்பட்டது. கொரோனாத் தாக்கத்தின் மத்தியில் பொருளாதாரத்தையும், முன்னேற்றமடைய செய்யும் திட்டங்களை செயற்படுத்துவதுடன், நாட்டின் அபிவிருத்திப் பணிகளையும் சிறந்த முறையில் முன்னெடுத்துள்ளோம்.

உரப் பிரச்சினையால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்று கூறப்படுவதை ஏற்றுக்கொள்ளமுடியாது. தன்னால் இயலாத விடயத்தைத் தோல்வி என்று குறிப்பிடுவதில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திறமையானவர். ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் தேர்தலில் போட்டியிடாமல் பின் கதவின் ஊடாக அவர் தப்பி சென்றார். தேர்தலில் போட்டியிட்டால் படுதோல்வியடைவார் என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார். 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் நடுநிலை எனக் குறிப்பிட்டுக் கொண்டு, ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்ட எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு மறைமுகமாக ஆதரவளித்தார்.

சேதனப் பசளைத் திட்டத்துக்கு எதிராக அவர் முன்வைக்கும் கருத்துக்களை மக்கள் ஏற்கமாட்டார்கள். தேர்தலை நடத்துவதற்கான சுகாதாரம் பாதுகாப்பான சூழல் காணப்படுகிறது என சுகாதாரத் தரப்பினர் ஆலோசனை வழங்கினால் தேர்தலை நடத்த தயாராகவுள்ளோம். மாகாண சபை, உள்ளூராட்சிமன்ற சபைத் தேர்தலைக் காட்டிலும் மாற்றீடாக பிறிதொரு தேர்தல் இடம்பெறலாம் -என்றார். (எ-இ)

## கந்தனின் தங்கத் தகடு தேட விசேட பொலிஸ் குழு

கொழும்பு, நவ.3

வரலாற்றுச் சிறப்புமிக்க கதிர்காமம் ஆலயத்துக்குச் சொந்தமான 38 புவுண் தங்கத் தகடு திருடப்பட்டமை தொடர்பாக விசேடபொலிஸ்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

கொழும்பு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் விசேட குழு ஒன்றே விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இந்தத் தங்கத்தகடு, 2019ஆம் ஆண்டு பக்தர் ஒருவரால் காணிக்கையாகக் கொடுக்கப்பட்டதாகும்.

இரு வாரங்களுக்குமுன்னர் இந்தத் தங்கத் தகடு திருடப்பட்டுள்ளமை தொடர்பாக பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவின் பணிப்பின் பேரில் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவின் விசேட பொலிஸ் குழுவொன்று விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. (எ-இ)

## இன்னும் பல சேவைகள் வழங்குமாம் பெரமுன!

கொழும்பு, நவ.3

எதிர்காலத்தில் தங்கள் கட்சிக்குக் கிடைக்கும் வெற்றியின் ஊடாக மக்களுக்கு மேலும் பல சேவைகளை வழங்குவோம் என்று நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 5ஆவது ஆண்டு நிறைவு விழாவில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

எவரையும் தோற்கடிப்பதற்காக நாம் கட்சியை உருவாக்கவில்லை. நாட்டு மக்களை வெற்றிபெற வைக்கவே கட்சியை உருவாக்கினோம். எமது கட்சியானது ஒரு இனத்துக்கு, மதத்துக்கு, குலத்துக்குரிய கட்சி கிடையாது. அது அனைவருக்குமானது.

தற்போது அரசுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலைமையை வெல்வதற்கு ஆதரவாளர்கள் அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டும்.

எதிரிகளால் விடுக்கப்படும் சவால்களைக்கூட நாம் ஆசீர்வாதமாக ஏற்றே பயணித்தோம். அத்தகைய சவால்களே எம்மைப் பலப்படுத்தின. எதிர்காலத்திலும் பிரமாண்டமான அரசியல் வெற்றிகளைப் பெறுவோம். அதன்மூலம் நாட்டுக்கும், மக்களுக்கும் சிறப்பான சேவைகள் வழங்கப்படும்.

எமது சகோதரக் கட்சிகளுடனும் ஒத்துழைப்புடன் செயற்படுவோம். எதிர்காலத்தில் பல சவால்கள் உள்ளன. அவற்றுக்கு முகங்கொடுப்போம். பின்வாங்க வேண்டாம். -என்றார். (எ-44)

## பசறை விபத்தில் பெற்றோரை இழந்த சிறார்கள் மனுத் தாக்கல்

### வீதி அதிகாரசபையே விபத்துக்கு காரணம் என்று குற்றச்சாட்டு

கொழும்பு, நவ.3

பஸ் விபத்தில் தங்கள் பெற்றோரை இழந்த மூன்று சிறுவர்கள், வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு எதிராக உயர் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்துள்ளனர்.

வீதி அபிவிருத்தி அதிகார சபை, தங்கள் கடமையைச் சரியாகச் செய்யாதமையாலேயே விபத்து நேர்ந்துள்ளது என்று அந்த மனுவில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பசறை, லுணுகலை பிரதான வீதியில் கடந்த மார்ச் மாதம் 20ஆம் திகதி நடந்த விபத்தில் 14 பேர் உயிரிழந்தனர்.

அந்த விபத்தில் பெற்றோரை இழந்த மூன்று சிறுவர்களே, தங்கள் பாட்டனார், பாட்டியின் ஊடாக உயர்நீதிமன்றில் அடிப்படை மனித உரிமைகள் மனுத்தாக்கல் செய்துள்ளனர். 9,8 மற்றும் 4 வயதுடைய சிறார்களே அடிப்படை மனித உரிமைகள் மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

வீதி அபிவிருத்தி அதிகார சபை தமக்கான பொறுப்பை உரிய வகையில் நிறைவேற்றாமையே இந்த விபத்து ஏற்படுவதற்கு காரணமாகியுள்ளது.

விபத்து ஏற்பட்ட பகுதியில் வீதியில் விழுந்திருந்த பாறையானது நீண்டகாலமாக அகற்றப்படாதிருந்தது. அது அந்தப் பகுதியூடான வாகனப் போக்குவரத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது.

அந்தப் பாறை அகற்றப்படாமைக்கும், விபத்து ஏற்பட்டமைக்கும் தொடர்பு உள்ளது என்று அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-இ)

முல்லைத்தீவில்

## 8 மில்லியன் ரூபா செலவில் இடர் தடுப்புச் செயற்றிட்டம்!



முல்லைத்தீவு, நவ. 3

முல்லைத்தீவு மாவட்டத்தில் 8 மில்லியன் ரூபா செலவில் இடர் தடுப்புச் செயற்றிட்டங்கள் தொடங்கிவைக்கப்பட்டுள்ளன என்று மாவட்டச் செயலர் க.விமலநாதன் தெரிவித்துள்ளார். இதன் ஒரு கட்டமாக முல்லைத்தீவு மாவட்டத்தின் பெரிய குளங்களில் ஒன்றான வவுனிக்குளத்தின்கீழ் நீர்பாயும் பகுதியில் ஏற்படக்கூடிய இடரைத் தடுக்கும் நோக்கில் புனரமைப்பு பணிகள் நேற்று தொடங்கிவைக்கப்பட்டுள்ளன. இந்தப் பணிகளுக்காக 2 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை முல்லைத்தீவு மாவட்டச் செயலர் க.விமலநாதன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு தொடக்கிவைத்துள்ளார். இதன்போது கருத்து தெரிவித்த அவர், முல்லைத்தீவு மாவட்டத்தில் 8 மில்லியன் ரூபா செலவில் இடர் தவிர்ப்பு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. வெள்ளம் மற்றும் வறட்சி என்பவற்றைத் தடுப்பதற்கான திட்டங்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன - என்றார். (ம-19)

## பதவி விலகினார் பாலித்த

கொழும்பு, நவ.3

ஸ்ரீலங்கா பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தேசிய ஊழியர் சங்கத்தின் பிரதம செயலாளர் பதவியில் இருந்து விலகிக் கொள்வதாக ஆனந்த பாலித்த அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

தேசிய ஊழியர் சங்கத்தில் வகித்த அனைத்துப் பதவிகளில் இருந்து விலகியுள்ளேன். ஒரு கோட்பாட்டைக் கொண்ட தொழிற்சங்கவாதி என்ற அடிப்படையில் அரசுடனோ அல்லது எந்தவொரு கட்சியுடனோ இணைந்து செயற்பட முடியாது. உள்ளூர் வளங்களை விற்கும் நடவடிக்கையில் தேசிய ஊழியர் சங்கம் தொடர்ந்தும் மௌனம் காப்பதை இனியும் ஏற்றுக் கொள்ள முடியாது. -என்றார். (எ-இ)

## போதைப்பொருளுக்கு அடிமை; 200 பேர் அதிரடியாகக் கைது




கொழும்பு, நவ.3

போதைப்பொருளுக்கு அடிமையான 200 பேர் அதிரடியாகக் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு வடக்குப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இவர்கள் கைதுசெய்யப்பட்டனர். இவர்களில் 44 பேர் கொரோனாத் தடுப்பூசி ஏற்றிக்கொள்ளாதவர்கள் - என்று விசாரணையில் தெரிய வந்துள்ளது. அவர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-4)

# போதைக்கு அடிமையாகியுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்கள்

## விசேட விசாரணை ஆரம்பம்



கொழும்பு, நவ. 3

**மதுபானம் மற்றும் போதைப்பொருள்களுக்கு அடிமையாகியுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பில் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.**

அதற்கமைவாக மேல் மாகாணத்தில் போதைப் பொருளுக்கு அடிமையாகியுள்ள 37 பொலிஸ் உத்தியோகத்தர்களின் விவரங்கள், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளன. அவர்களில் 28 பேர் கொழும்பு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. புலனாய்வுப் பிரிவினர் குறித்த விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். இந்தத் தகவல்களினூடாக வெளிப்படுத்தப்படும் பொலிஸ் உத்தியோகத்தர்களை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அவர்களை புனர்வாழ்வுக்கு உட்படுத்தவும், பின்னர் அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஒ-4)

## பட்டதாரிப் பயிலுநர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம்

கொழும்பு, நவ.3

பட்டதாரிப் பயிலுநர்கள் அனைவருக்கும் விரைவில் நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது என்று உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறி தெரிவித்துள்ளார்.

அரசதுறையில் இதுவரை 58 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பட்டதாரிகள் பயிலுநர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்குவதற்கு அமைச்சரவை அண்மையில் தீர்மானித்துள்ளது. அதற்கமைய அவர்களுக்கு துரிதமாக நிரந்தர நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனத் தெரிவித்தார். (யு-இ)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் பனை அபிவிருத்திச்சபை கூட்டாய்வு

யாழ்ப்பாணம்,நவ.3

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் பனைஅபிவிருத்திச்சபை ஆகியன இணைந்து மேற்கொள்ளவுள்ள ஆய்வு நடவடிக்கைகள் தொடர்பிலானபூர்வாங்க சந்திப்பு பல்கலைக்கழகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதன்போது பனை அபிவிருத்திச்சபையால் முன்மொழியப்பட்டுள்ள ஆய்வு நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயப்பட்டன.

பனை அபிவிருத்திச் சபையின் சார்பில் அதன் தலைவர் கிரிசாந்த பத்திராஜ, பணிப்பாளர் சபை உறுப்பினரும், பனை ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆலோசகருமான பேராசிரியர் சு.மோகனதாஸ், பனை அபிவிருத்திச்சபையின் பிரதிப் பொதுமுகாமையாளரும், பனை ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆராய்ச்சி மற்றும் தர நிர்ணய முகாமையாளருமான எஸ். விஜேந்திரன் ஆகியோர், பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜாவைச் சந்தித்துக் கலந்துரையாடினர். (ஒ-4)

## மன்னார் விவசாயிகளுக்கு பயிர் விதைகள் வழங்கல்

மன்னார்,நவ.3

மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு பயறு, உளுந்து மற்றும் வீட்டுத்தோட்டப் பயிர்ச் செய்கை மேற்கொள்பவர்களுக்கு பயிர் விதைகள் வழங்கப்பட்டன.

நிலையான வீட்டுத்தோட்ட அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் பின்தங்கிய கிராமிய பிரதேச அபிவிருத்தி வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச் செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் அனுசரணையில், விதைகள் வழங்கப்பட்டன.

5 பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள கமநல அபிவிருத்தித் திணைக்களங்கள் ஊடாக, தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு விதைகள் வழங்கப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தானால், பயனாளிகளுக்கு விதைகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் மாவட்டச் செயலர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல், பிரதேச செயலர்கள், மன்னார் மாவட்ட விவசாயப் பணிப்பாளர் திருமதி. சகீலா பானு, உதவி கமநல சேவை ஆணையாளர் மெரீன் குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஒ-4-56)



## சுன்னாகம் சமூக நலன்நோக்கு ஒன்றியம் அங்குரார்ப்பணம்



யாழ்ப்பாணம், நவ.3

யாழ்ப்பாண், சுன்னாகம் ஐயனார் சமூக நலன்நோக்கு ஒன்றியம் வலி.தென்மேற்கு பிரதேசசபையின் உறுப்பினர் பாலசிங்கம் சுரேஷ்குமாரின் நெறிப்படுத்தலில் சுன்னாகம் ஐயனார் கோவில் திருமண மண்டபத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இதில் ஒன்றியத்தின் உறுப்பினர்களாக சமூகச் செயற்பாட்டாளர்கள் தெரிவுசெய்யப்பட்டதோடு கொள்கை விளக்கமும் அளிக்கப்பட்டது.

இந்த ஒன்றியத்தின்மூலம் சுன்னாகம் பகுதியிலுள்ள பொருளாதாரம் நலிவடைந்த குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவி மற்றும் கற்றல் செயற்பாடுகளுக்கான உதவி என்பவற்றை புலம்பெயர் உறவுகள் மற்றும் வர்த்தகர்களின் நிதிப்பங்களிப்பில் உதவித்திட்டங்களாக பெற்றுக்கொடுக்கப்படும் என நிகழ்வில் உரையாற்றிய வலி.தெற்கு பிரதேச சபை உறுப்பினர் பாலசிங்கம் சுரேஷ்குமார் தெரிவித்துள்ளார். (ச-20)

# இளம் வாக்காளர்கள் வாக்களிக்க வாய்ப்பு

கொழும்பு, நவ.3

வாக்காளர் பதிவுச் சட்டவரைவு மூலம், 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் வாக்களிக்க வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ஜி. புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

1980ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க வாக்காளர் பதிவுச் சட்டத்துக்கு அமைய, முன்னர் ஒவ்வொரு வருடமும் ஜூன் மாதம் முதல் திகதியில் 18 வயதைப் பூர்த்தி செய்தவர்கள் வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்டனர். அதன்பின்னர் பிறந்த தினத்தை கொண்டவர்களுக்கு அதற்கு அடுத்த வருடம் மே மாதம் 31ஆம் திகதிக்குப் பின்னர் இடம்பெறும் தேர்தலிலேயே வாக்குரிமை கிடைத்தது.

இது தொடர்பில் பல்வேறு இளைஞர் அமைப்புக்கள் கோரிக்கைகளை முன்வைத்துள்ளன. அதற்கமைவாக தேர்தல்கள் ஆணைக்குழுவும் விசேட கவனம் செலுத்தி, 2021 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பித்துள்ளது.

2021 - 22ஆம் இலக்க வாக்காளர் பதிவுச் (திருத்தம்) சட்டம் ஒக்ரோபர் மாதம் 13 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

இது தொடர்பில் இளைஞர்களுக்கு அறிவிக்கப்படும். இளைஞர் ஒருவர் 18 வயதில் வாக்காளராகப் பதிவு செய்துகொள்ள, அவரது கிராமத்தைச் சேர்ந்த கிராம அலுவலர் ஊடாக விண்ணப்பிக்க முடியும்.

வாக்காளர் பட்டியலைத்தவிர, மூன்று மாதங்களுக்கு ஒரு முறை துணைப்பட்டியல் தயாரிக்கப்படுகின்றது. இளைஞர்களின் பெயர்களை முதலில் அதில் சேர்க்க முடியும். அத்தோடு, வாக்காளர் எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டு முதல் பெப்ரவரி மாதம் முதலாம் திகதிக்கு மாற்றப்படும் - என்றார். (ஒ-4)



அமரர் கந்தையா சர்வேஸ்வரனின் முதலாவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, அல்வாய் வடமேற்கு பிரிவில் பொருண்மியம் நலிவடைந்த 40 குடும்பங்களுக்கு ரூபா ஒரு இலட்சம் பெறுமதியான அத்தியாவசிய உணவுப் பொதிகள், குறித்த பிரிவு கிராம அலுவலர் அலுவலகத்தில் வட இலங்கை சமாதான நீதிவான் சங்க தலைவர் லயன் கலாநிதி ஜெயவிந்தன் தலைமையில் வழங்கி வைக்கப்பட்டன. (யு-9)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


## அவகாசமும் ஆபத்தும்

புவி வெப்பமயமாதலால் உலகில் உள்ள தீவு நாடுகள் பலவினதும் இருப்பு கேள்விக்கு உட்பட்டுள்ள நிலையில், சர்வதேச அளவில் நடந்த – நடந்துகொண்டிருக்கின்ற – இரு மாநாடுகள் பெரிதும் பேசுபொருளாக மாறியிருக்கின்றன. ஒன்று இத்தாலியின் ரோம் நகரில் நடைபெற்ற ஜி – 20 மாநாடு. மற்றையது ஸ்கொட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் நடைபெற்றுவரும் பருவநிலை மாறுதல் தொடர்பான சர்வதேச உச்சி மாநாடு. இரண்டும் உலகின் பெரும் தலைவர்களுடன், ஜனாதிபதிகளுடன் சமகாலத்தில் நடக்கின்றன.

இலங்கை ஒரு தீவு நாடு. அவுஸ்ரேலியா, நோர்வே, நியூஸிலாந்து போன்று நிலப்பரப்பில் பரந்துவிரிந்த தேசமல்ல இலங்கை. புவி வெப்பமாதலால் பனிப்பாறைகள் உருகி நீர்மட்டம் அதிகரித்தால் சிறு தீவுகளுக்குத்தான் முதலில் பேராபத்து நிகழும். அந்த ஆபத்து மிகுந்த பட்டியலில் இலங்கைக்கும் முக்கிய இடமுண்டு. இந்தக் காரணங்களால் ஓர் இலங்கையராக கிளாஸ்கோவை யும் ரோமையும் கூர்ந்து அவதானிக்க வேண்டிய பொறுப்பும் – கடமையும் எமக்கு உள்ளது. அவ்வாறு அவ தானித்தால் அதில் எஞ்சுவது என்னவோ ஏமாற்றம்தான்.

ரோம் ஜி – 20 மாநாட்டில் பருவநிலை மாறுபாடுகள் தொடர்பில் சிலபல முடிவுகள் எட்டப்பட்டிருக்கின்றன. அவற்றில் புவியின் வெப்பநிலையை 1.5 டிகிரி குறைவடையச் செய்தல் என்பதும் முதன்மையானது. புவியின் வெப்பநிலையைக் குறைவடையச் செய்ய வேண்டும் என்று ஜி – 20 நாடுகளோ அல்லது சர்வதேச நாடுகளோ முடிவெடுப்பது வழக்கமானதொன்றே. அமெரிக்காவின் ஜனாதிபதி ஒபாமா ஆட்சியமைத்திருந்த காலத்தில் (2015ஆம் ஆண்டில்) எட்டப்பட்ட முடிவு இது. பிரான்ஸின் தலைநகர் பரிஸில் ஒன்றுகூடிய உலகத்தலைவர்கள் ''உலகின் வெப்பநிலையை 2 டிகிரியால் குறைக்க வேண்டும். தீவு நாடுகளின் இருப்புக்கு அது அவசியம்'' என்று அறிவித்திருந்தனர். தற்போது ட்ரம்ப், பைடன் என்று இரு ஆட்சிமாற்றங்களை அமெரிக்காவும் சர்வதேசமும் கண்டபோதிலும் இன்னமும் இந்தத் திட்டத்துக்கு செயல்வடிவம் கொடுக்கப்படவில்லை. இன்னும் வெளிப்படையாகச் சொல்வதாயின் ஏற்கனவே எடுக்கப்பட்ட முடிவை சர்வதேசத் தலைவர்கள் மீண்டும் உறுதி செய்துள்ளனரே தவிர 'ஆஹா ஓஹோ' என்று பெருமைப்பட்டுக்கொள்ள ஜி – 20 இல் ஒன்றுமே இல்லை.

கிளாஸ்கோவில் உலகின் பெரும் பிரச்சினையான 'கார்பன்' வெளியேற்றம் பெரியளவில் பேசப்படுகின்றது. 'கனிம எரிபொருள்கள் மீதான எங்கள் அடிமைத்தனம், மனித குலத்தை அழிவின் விளிம்பில் தள்ளிவிட்டது. கார்பன் மூலம் நம்மை நாமே கொன்றது போதும். இயற்கையைக் கழிப்பறை போன்று நடத்தியது போதும். துளையிடுவதும் – தோண்டுவதும் – எரிப்பதுவும் இனிப் போதும்' என்று மன்றாட்டமாகக் கேட்டுள்ளார் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் குட்டரெஸ். ஆனால், கார்பன் வெளியேற்றத்தை உலக நாடுகள் சடுதியாகக் கைவிட வாய்ப்பேயில்லை. அதிலும் கார்பன் வெளியேற்றத்தில் முக்கிய பங்காற்றும் இந்தியா அடுத்த அரை நூற்றாண்டுகளை அவகாசமாகக் கேட்டுள்ளது. 2070ஆம் ஆண்டில்தான் கார்பன் வெளியேற்றம் இந்தியாவில் பூச்சியமாக்கப்படும் என்று இந்தியப் பிரதமர் மோடி அறிவித்துள்ளார். கிட்டத்தட்ட இதே நிலைப்பாட்டைத்தான் ஏனைய கைத்தொழில் நாடுகளும் எடுத்துக்கொள்ளும். குறைந்தது அடுத்த 3 தசாப்தங்களாவது இந்த காலநீடிப்பு நீண்டு நிலைக்கும். ஆனால், அதற்குள் எல்லாம் கைமீறிப்போயிருக்கும். கார்பன் வெளியேற்றத்தால் உலக வெப்பநிலை உயர்ந்து, துருவப்பகுதியில் உள்ள பனிக்கட்டிகள் உருகி, கடல் மட்டம் உயர்ந்து, கரையோடு விளையாடும் தீவுகளை விழுங்கிவிட இந்த 50 ஆண்டுகள் அவகாசம் போதுமானது. கிளாஸ்கோவில் வாக்குறுதியளித்தபடி, இந்தியா உள்ளிட்ட நாடுகள் 2070 ஆம் ஆண்டு கார்பன் வெளியேற்றத்தை பூச்சிய நிலைக்கு கொண்டு வரும்போது, மாலைதீவு முதல் இலங்கை வரையிலான சிறுதீவுகள் உலகவரைபடத்தில் நிலைத்திருந்தால் அது பேரதிசயமே...!




### சேதனப் பசளை விவகாரம்:

# மூன்றாம் தரப்பிடம் செல்வது ஆபத்தானது

### எச்சரிக்கிறார் தயான்

கொழும்பு, நவ. 3

**சீனாவிலிருந்து கொண்டுவரப்பட்ட உரத்தை இலங்கையிலுள்ள ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள அரச நிறுவனமொன்று நிராகரித்துள்ள நிலையில், மீளாய்வுக்காக மூன்றாம் தரப்பை நாடுவது தவறாகும். அந்தத் தவறை அரசு செய்யக்கூடாது. அது பயங்கரமான பிரச்சினைகளுக்கு வழிவகுத்துவிடும் என்று சர்வதேச இராஜதந்திரியும், அரசியல் விமர்சகருமான கலாநிதி தயான் ஜயதிலக்க தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

சீனாவிலிருந்து கொண்டுவரப்பட்ட சேதனப் பசளையில் தீங்கு விளைவிக்கும் பக்ரீறியாக்கள் இருப்பதாக இலங்கையிலுள்ள அரச நிறுவனம் (தேசிய தாவரங்கள் தொற்றுநீக்கி தனிமைப்படுத்தும் சேவை நிலையம்) ஆய்வு மூலம் அறிவித்துள்ளது. ஒரு தடவை அல்ல இரண்டு தடவைகளுமே நிராகரிக்கப்பட்டுள்ளது. குறித்த அரச நிறுவனத்தில் கற்றவர்களே இருக்கின்றனர்.

எனினும், இலங்கை நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை முடிவை ஏற்க முடியாது எனவும், சர்வதேசத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மூன்றாம் தரப்பிடம், உரமாதிரிகளை வழங்கி மீளாய்வு செய்ய வேண்டும் எனவும் சீன நிறுவனம் அறிவித்துள்ளது. சீன நிறுவனத்தின்கோரிக்கையைஇலங்கை அரசு ஏற்கும் பட்சத்தில் அது பிரச்சினைகளுக்கு வழிவகுத்துவிடும்.

இலங்கையின் நீதிக் கட்டமைப்புமீது நம்பிக்கை இல்லை, எனவே, மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேசத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மூன்றாம் தரப்பு ஊடாக விசாரணை நடத்தப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டால் என்ன செய்வது? ஏற்கனவே, மனித உரிமைகள் பேரவை, சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் ஆகியன மேற்படி கோரிக்கையை விடுத்து வருகின்றன.

எனவே, சீன நிறுவனத்தின் கோரிக்கையை அரசு ஏற்கும் பட்சத்தில் அது தவறான முன்னுதாரணமாக அமைந்துவிடும். மேலும் பல பயங்கரமான பிரச்சினைகளில் சிக்கவேண்டிய நிலைமை ஏற்படும். எனவே, மூன்றாம் தரப்பு கோரிக்கையை அரசு ஏற்கவே கூடாது. அவ்வாறு ஏற்றால் அது இலங்கையின் இறையாண்மைக்கும் மரண அடியாக அமையும் - என்றார். (ஒ-44)

## கொழும்பு பல்கலையின் வேந்தராக ஆனந்ததேரர்

கொழும்பு, நவ. 3

கொழும்பு - பல்கலைக் கழகத்தின் வேந்தராக நாரஹேன்பிட்டி அபயராமதிபதி வண. முருத்தெட்டுவே ஆனந்த தேரர் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கான நியமனக்கடிதம் தற்போது கிடைத்துள்ளது. தற்போதைய அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வருவதற்கு காரணமாக இருந்த இவர், அண்மைக்காலமாக கடுமையாக அரசாங்கத்தை விமர்சித்து வருகின்றார். அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கத்தின் தலைவராகவும் ஆனந்த தேரர் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

நவம்பர் 2021

வடமாகாண மரநடுகை மாதம்



"எவரொருவர் மரங்களை நடுகின்றாரோ, அவர் தன்னை விட மற்றவர்களை அதிகம் நேசிப்பவராவார்"

– தோமஸ் ஃபுல்லர்

# எரிவாயுவை பெறுவதில் தொடர்ந்தும் தட்டுப்பாடு!

கொழும்பு, நவ. 3

**நாடு முழுவதும் உள்ளூர் சந்தையில் லாப் மற்றும் லிட்ரோ சமையல் எரிவாயு கொள்கலன்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இரண்டு வகை சமையல் எரிவாயுகளில் ஒன்றைக் கூட கொள்வனவு செய்ய முடியாது நுகர்வோரும் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.**



நாட்டில் அமெரிக்க டொலர் தட்டுப்பாடு காரணமாக எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக லாப் சமையல் எரிவாயு நிறுவனத்தின் தலைவர் டப்ளியூ.கே.எச். வேகப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

நாளொன்றுக்கு 300 முதல் 400 தொன் எரிவாயு சந்தைக்கு விநியோகிக்கப்படுகின்றது. வங்கிகளில் டொலர் கிடைக்காததால், எரிவாயுவை இறக்குமதி செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. கடன் பத்திரங்களைப் பெற வங்கிகளை வணங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது - என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## குழுக்களுக்கு இடையே மோதல்

# துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு!



கொழும்பு, நவ. 3

இரு குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலின்போது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்தார். இருவர் காயமடைந்தனர்.

காலி, ஊருகஸ்மங்சந்தி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கருவலகொட பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் தலைமையகம் வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் மடக்கும்புர, கரன்தெனிய பிரதேசத்தைச் சேர்ந்த 51 வயது நபரே உயிரிழந்துள்ளார். சம்பவத்தில் உயிரிழந்தநபர், துப்பாக்கியுடன் மற்றுமொருவரை அழைத்துக் கொண்டு களுவலகொட பிரதேசத்திலுள்ள வீடொன்றுக்குச் சென்று துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளர்.

இந்தச் சம்பவத்தில், குறித்த வீட்டிலிருந்த பெண்ணொருவர் படுகாயமடைந்துள்ளார். இதையடுத்து வீட்டிலிருந்தநபர், துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட நபர் மீதும் அவருடன் சென்ற நபர் மீதும் கடும் தாக்குதலை மேற்கொண்டுள்ளார்.

இதன்போதே துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட நபர் மரணமடைந்துள்ளார். சம்பவத்தில் படுகாயமடைந்த பெண்ணும், மற்றைய நபரும் எல்பிட்டிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதேவேளை - தாக்குதலுடன் தொடர்புடைய நபரைக் கைதுசெய்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## எரிவாயு விநியோக விவகாரம்

# அமெரிக்க நிறுவனத்துடனான ஒப்பந்தத்தை உடன்நிறுத்துக

## அமெரிக்கத் தூதரகம் ஊடாக கோரிக்கை

கொழும்பு, நவ. 3

கேள்விப்பத்திர நடைமுறையை மீறி, அமெரிக்க நிறுவனத்தின் ஊடாக இலங்கையில் மேற்கொள்ளவுள்ள எரிவாயு விநியோக ஒப்பந்த செயற்பாட்டை நிறுத்த வேண்டும் என்று அமெரிக்கத் தூதரகத்திடம் கோரப்பட்டுள்ளது.

அதேவேளை, சர்வதேச கேள்விப்பத்திர முறையைப் புறக்கணித்து மேற்கொள்ளப்பட்ட இந்தச் செயற்பாடு, தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுமானால், கடும் தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர் சங்கம் எச்சரித்துள்ளது.

இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர் சபை இது தொடர்பில் இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளது. அமெரிக்க நிறுவனத்தினால் கோரப்படாத கேள்விப்பத்திர முன்மொழிவு இந்த விடயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளமையானது, மின்சார சபையின் கேள்விப்பத்திர முறையை குறைமதிப்புக்கு உட்படுத்தியுள்ளதாக அந்தச் சபை குறிப்பிட்டுள்ளது.

இந்தக் கோரப்படாத முன்மொழிவை ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கு அனுப்புவதில் அமெரிக்கத் தூதரகமே ஈடுபட்டமையால், அமெரிக்காவையும் இந்தமுறை பாதிக்கும் என்று மின்சார சபையின் பொறியியலாளர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (ம)

# தீபாவளி உற்சவமும் நரகாசுரன் வதமும்

பளை நவ 3

இயக்கச்சி - மல்வில் கிருஷ்ணன் கோவிலில் தீபாவளி உற்சவமும் நரகாசுரன் வதமும் நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்த உற்சவமானது பிற்பகல் 2.00 மணிக்கு ஆரம்பமாகி, பிற்பகல் 3.30 மணிக்கு நரகாசுரன் வதம் நடைபெறும்.

சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி அடியார்கள் இதில் கலந்து கொள்ளுமாறு கோவில் தர்மகர்த்தா சபை அறிவித்துள்ளது. (ய-9)



# கிராம அலுவலகங்களிடையே முகாமைத்துவப் போட்டிகள்

சாவகச்சேரி,நவ.3

கிராம அலுவலர் அலுவலகங்களுக்கிடையில் நடத்தப்பட்ட முகாமைத்துவப் போட்டிகளில், தென்மராட்சிப் பிரதேச செயலக ரீதியில் வெற்றி பெற்ற அலுவலகங்களின் விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைவாக 'ஏ' பிரிவில் 11 கிராம அலுவலர்களின் அலுவலகங்களும், 'பி' பிரிவில் 22 அலுவலகங்களும், 'சி' பிரிவில் 24 அலுவலகங்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

தெரிவு செய்யப்பட்ட அலுவலகங்களுக்கான விருதுகளும், பரிசில்களும் பிரதேச செயலகத்தில் வழங்கப்பட்டன. இதற்கான செலவுகளை தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தினர் வழங்கினர்.

'ஏ' பிரிவில் முதலிடத்தை உசன் பிரிவும் ,இரண்டாமிடத்தை கெற்பேலி மற்றும் சந்திரபுரம் பிரிவுகளும், மூன்றாமிடத்தை கல்வயல் பிரிவும் பெற்றுக்கொண்டன.

இவற்றுடன் மட்டுவில் வடக்கு, இராமாவில், சரசாலைதெற்கு, மாசேரி, கோயிற்குடியிருப்பு , சரசாலைவடக்கு, கைதடி மேற்கு ஆகிய பிரிவுகளும் பெற்றுக் கொண்டன.

இவற்றுக்கான விருதுகளையும், பரிசில்களையும் அந்தந்தக் கிராம அலுவலர்கள் பெற்றுக் கொண்டனர். (ஒ-4-9)

# தென்மராட்சியில் மீண்டும் அதிகரிக்கிறது கொரோனா



யாழ்ப்பாணம், நவ. 3

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் நேற்றுமுன்தினம் மாத்திரம் 9 பேர் துரித அன்டிஜென் பரிசோதனையில் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். பிரதேசத்தில் கொரோனா துரிதமாகப் பரவி வருகின்றது என்பதைத்தான் இது காட்டிநிற்கின்றது என்று சுகாதாரத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

பொதுமக்கள் அதிகமாக ஒன்றுகூடும் திருமண நிகழ்வுகள், மரணச்சடங்குகள், ஆலய உற்சவங்கள், தீபாவளிக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்வதை மக்கள் இயலுமான வரை தவிர்க்க வேண்டும் என்றும் கொரோனாத் தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்ளவேண்டும் என்றும் சுகாதாரத்துறையினர் மேலும் அறிவுறுத்தியுள்ளனர். (ம-159)



# 200 விவசாயிகளுக்கு உரம் விநியோகம்

கிளிநொச்சி,நவ.3

கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 200 விவசாயிகளுக்கு சேதனப் பசளை நேற்று விநியோகிக்கப்பட்டது.

கிளிநொச்சி கமநல சேவை நிலையம் ஊடாக, பொட்டாசியம் குளோரைட் மற்றும் திரவ உரம் ஆகியன வழங்கப்பட்டன.

மகிழங்காடு கமக்காரர் அமைப்பின் கீழுள்ள 200 விவசாயிகளுக்கே உரம் வழங்கப்பட்டது. (ஒ-4-113)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
24 . 08 . 1984

மறைவு
04 . 10 . 2021

அமரர்

**திருமதி கனீதனா (நீத்தா) சசிவர்ணன்**

நாட்கள் முப்பத்தொன்று ஆனதுவோ
உன் முகம் கண்டு ஆறவில்லை எம் இதயம்
அன்பும் பாசமும் நிறைந்த பொக்கிஷம் நீ
நித்தம் புலம்புகின்றோம்
உன் திருமுகத்தை காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்

**அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல நயினை நாகபூசணி அம்மனை பிரார்த்திக்கின்றோம்.**

நினைவுகளுடன்...

077 815 3538 குடும்பத்தினர்.

(CS 17918) 1-6

# மரண அறிவித்தல்



## திரு. சின்னத்துரை பகவான்

(இளைப்பாறிய ஆசிரியர் - யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

கைதடி நுணாவிலைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கா.சி.பகவான் அவர்கள் நேற்று (02.11.2021) செவ்வாய்கிழமை இறைபத மடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னத்துரை - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ் சென்ற மங்கயற்கரசியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கேசவன் மற்றும் சிவஅரியோம்பூபதி - கமலநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் அதிசோபனை, நித்தியானந்தன் (டாக்டர்), சச்சிதானந்தன் (கனடா), காலஞ்சென்ற வித்தியானந்தன் (ஜேர்மனி), மற்றும் சோதியானந்தன் (மேக்கன்ரைல் பாதுகாப்புச் சேவை), காலஞ் சென்ற ஞானசோபனை (ஆசிரியர்) மற்றும் விவேகானந்தன் (கட்டடப் பொறியியலாளர் - கொழும்பு) மதிசோபனை (தாதி உத்தியோத்தர் - கனடா) ஆகி யோரின் அன்புத் தந்தையும் விக்னராஜ், இரஞ்சிதம் (இளைப்பாறிய ஆசிரியர்) விஜி காந்தி (கனடா), வினோ (ஜேர்மனி), விக்கினேஸ்வரி (ஆசிரியை), தேவேந்திரன் (ஓய்வுநிலை உ.க.பணிப்பாளர் - வடமாகாணம்), கலைவாணி (விரிவுரையாளர் - திறந்த பல் கலைக்கழகம் - நாவல), சிவகுமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாம னாரும் காலஞ் சென்றவர்களான நமசிவாயம், பரமசிவம், மனோன்மணி, சுப்பிர மணியம், பத்ம நாதன், மகேஸ்வரி மற்றும் நடராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் சோபிகா - சேகரன், மிருணிகா - ராகுலன், துங்கீசன், அஜந்தன், ஆதவன், குருபரன், எல்கனான் டேவிட், குகப்பிரியா, பவிசன், காலஞ்சென்ற ரேனிதா, மற்றும் கிரித்திகன், ஜனிற்றா, ஜோனாந்தன், ஜஸ்ரினா ஆகியோரின் பேரனும் சசீந்திரன், டாக்டர் பவித்திரா - சுதர்சன் ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.11.2021) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியை களுக்காக குச்சப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துக் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

**தகவல்:**
**டாக்டர். ப.நித்தியானந்தன் (மகன்)**
**0776701370**

**மட்டுவில் தெற்கு,**
**சாவகச்சேரி.**

(CS 40904) (3.6)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**இராசையா குமாரசுவாமி**

அன்னை மடியில் 24.04.1938
இறைவன் அடியில் 03.11.2019

அன்பின் தந்தையே!
நீங்கள் எமைப் பிரிந்து தொலைவு
சென்று
ஈராண்டு ஆனதோ!
ஆண்டுகள் இரண்டு அல்ல ஓராயிரம்
ஆண்டுகள் சென்றாலும்
நீங்கள் விட்டுச் சென்ற நினைவுகள்
என்றும்
நம்மை விட்டு நீங்காது அப்பா!

பாடசாலை வீதி,
கல்வயல், சாவகச்சேரி.

**மனைவி மற்றும்**
**பிள்ளைகள்.**

(CS 17917) 1-6

# மரண அறிவித்தல்

## பெர்னான்டோ மாகிறேற்



காலஞ்சென்ற அளம்பில் - முல்லைத்தீவு உடையார் அன்ரனி பெர்னான்டோ அவர் களின் பாரியார் பெர்னான்டோ மாகிறேற் அவர்கள் தனது 109 ஆவது வயதில் முக்தியடைந்தார்.


அன்னாரின் சரீர அடக்க நிகழ்வு இன்று (03.11.2021) புதன்கிழமை காலை 10 மணியளவில் அளம்பில் சேமக்காலையில் நடைபெறும் என்பதைச் சகலருக்கும் அறியத்தருகிறோம்.

**தகவல்: பிள்ளைகள்**

தொடர்புகளுக்கு:
F. A.அமலதாஸ் (மகன் - 077 785 9035)
F.J.சதானந்தம் (மகன் - 077 788 2305)
S.தேவி - 077 570 8573

(CS.40899) (2.6)

# மரண அறிவித்தல்



தோற்றம்
17 . 03 . 1932

மறைவு
31 . 10 . 2021

## அமரர் திரு. கந்தையா தில்லையம்பலம்

(ஓய்வுநிலை வைத்தியர்)

தங்கோடை காரைநகரை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுநிலை வைத்தியர் திரு. கந்தையாதில்லையம்பலம் அவர்கள் கடந்த (31.10.2021) அன்று சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-சின்னாட்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான சிவகுரு - மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சிவபாக்கியம் அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான அன்னம்மா, மீனாட்சிப்பிள்ளை, கனகசபை, சாவித்திரிதேவி ஆகியோரின் அன்புச் சகோ தரனும் புஸ்பமலர், கெங்காலெட்சுமி (ஓய்வுநிலை மருந்தாளர்), மகாதேவா (அவுஸ்தி ரேலியா), சந்திரமதி (சுவிஸ்/வவுனியா), புஸ்பராணி (நோர்வே), கமலாசினி (லண்டன்), சகாதேவன் (கனடா), புஸ்பகாந்தி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ் சென்ற வைத்தியநாதன் மற்றும் அருளானந்தம், மனோரஞ்சனா, நவரட்ணராசா, ராஜேந் திரன், சண்முகராஜா, ஜெகதீஸ்வரி, இராஜகுலசூரியர் ஆகியோரின் அன்பு மாமனாரும், மனோராஜ், தனுசா, தர்ஷ்யா, கோபி, ஆரணி, குருபரன், கல்யாணி, செந்தூரன், வினோ தன், அனந்தன், ஜெயந்தன், சிந்துஜா, ஜனனி, திலீபன் ஜாதவன், ஜானகி ஆகியோரின் பாசமிகு பேரனும் கௌதமன், விக்கிரமன், ஜேம்ஸ், ஆதிரா, ஹரிஸன், ஹாசினி, ஹாரிக்கா, அர்சுன், ஆகாஸ், அக்சரா, லாவண்யா, கீரன் ஆரியா, ஜேடா, ஜலா ஆகியோ ரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (04.11.2021) வியாழக்கிழமை மு.ப 11:00 மணியில் இருந்து அன்னாரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுப் பின்னர் இறுதிச் சடங்குகள் மறு நாள் (05.11.2021) வெள்ளிக்கிழமை காலை 8:00 மணிக்கு நடைபெற்று பின்னர் சாம்பலோடை மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**திரு.க.தி.மகாதேவா**
**(மகன்) 0776 457 507**

**தங்கோடை,**
**காரைநகர்.**

(CR 5825) 1-3

# பலசரக்கு கடையில் பியர் ரின்கள் மீட்பு

## ஒருவர் கைது

பலசரக்குக் கடை ஒன்றில் அனுமதிப்பத்திரமின்றி மதுபான விற்பனையை மேற்கொண்டார் என்ற குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் இரவு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அங்கிருந்து ஒரு தொகை பியர் ரின்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரவெட்டிப் பகுதியில் பலசரக்குக் கடையொன்றில் மதுபானம் விற்பனை செய்யப்படுகின்றது என்று நெல்லியடி பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல் கிடைத்தது. சம்பவ இடத்துக்கு விரைந்த நெல்லியடிப் பொலிஸார் குறித்த பலசரக்குக் கடையை முற்றுகையிட்டனர். கடையில் அனுமதிப்பத்திரமின்றி மதுபான விற்பனை மேற்கொண்டமை தெரியவந்தது. அதனையடுத்து பொலிஸார் சந்தேகநபர் ஒருவரைக் கைது செய்தனர். (ஒ-4-125)

# சுகாதாரப் பிரிவுக்கு மூன்றாவது தடுப்பூசி

கிளிநொச்சி,நவ.3

கிளிநொச்சி மாவட்டத்தில் முன் களப்பணியாற்றும் சுகாதாரப் பிரிவினருக்கு கொரோனாத் தடுப்பூசியின் மூன்றாவது டோஸ் நேற்று ஏற்றப்பட்டது.


கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கண்காணிப்பில், பிராந்திய சுகாதார நிலையங்களில் தடுப்பூசி ஏற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ந.சரவணபவன் மற்றும் மருத்துவர்கள் , தாதியர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து பொலிஸார், படையினர் உள்ளிட்ட முன்களப்பணியாளர்கள் மற்றும் 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு மூன்றாம் தடுப்பூசி ஏற்றப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-46)

## மரண அறிவித்தல்

மலர்வு 24 . 04 . 1935



உதிர்வு 29 . 10 . 2021

### ஆறுமுகம் சிவராசா

யாழ் நவாலி வடக்கை பிறப்பிடமாகவும் நீர்வேலியை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சிவராசா அவர்கள் கடந்த (29.10.2021) வெள்ளிக் கிழமை அன்று காலமானார்.

அன்னார் ஆறுமுகம் (நவாலி வடக்கு) சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கனகரத்தினம் மற்றும் இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரி அவர்களின் அன்பு கணவரும், வசுமதி (பிரான்ஸ்), வளர்மதி (ஜேர்மனி), சிவானந்தன் (பிரான்ஸ்), விஜியானந்தன் (சுவிஸ்), வான்மதி (பிரான்ஸ்), சசியானந்தன் (பிரான்ஸ்), பிரேமானந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், முத்துக்குமார், சின்னத்தங்கை, கோவிந்தராசா, மகேஸ்வரி, சின்னம்மா, இரத்தினம் ஆகியோரின் அன்பு சகோதரரும், காலஞ்சென்ற கோபாலசிங்கம், கமலாம்பிகை, காலஞ்சென்ற புவனேஸ்வரன் மற்றும் பேரின்பநாதன், செல்வராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், விஜயசந்திரன் (பிரான்ஸ்), சிவராசா (ஜேர்மன்), கௌரி (பிரான்ஸ்), சியாமளா (சுவிஸ்), சிவகுமார் (பிரான்ஸ்), அகிலா (பிரான்ஸ்), சங்கீதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், பேரப்பிள்ளைகளின் அன்புப் பேரனும், பூட்டப்பிள்ளைகளின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.11.2021) புதன்கிழமை பி.ப. 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பிற்கு: சிவா-+33695354142
சுமதி-+33627017567
பத்மினி-+4915781933362

தகவல்:
குடும்பத்தினர்

(CR 5824) 01/06

## மாநகரசபை யாழ்ப்பாணம்
## நடுக்கட்டு உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம் கோரல் - 2021

யாழ்ப்பாணம் மாநகரசபையின் ஆதனவரி அறவீடுகளை மேற்கொள்வதற்கு ஆதன வரிப் பகுதியின் கீழ் கடமையாற்றுவதற்கு நடுக்கட்டு உத்தியோகத்தர் பதவிக்கான (3பேர்) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

01. விண்ணப்பதாரி உடல் ஆரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் யாழ் மாநகரசபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
02. விண்ணப்பப்படிவத்தினை மாநகரசபையில் பெற்றுக்கொள்ளவும் பிறப்புசான்றிதழ்,கல்விச் சான்றிதழ், தேசியஅடையாள அட்டை, கிராமசேவையாளரின் நற்சான்றிதழ் மற்றும் வதிவி டச் சான்றிதழ் என்பவற்றின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணபத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.
03. நடுக்கட்டு உத்தியோகத்தராகத் தெரிவு செய்யப்படுபவருக்கு, அவர் சேகரிக்கும் ஆதனவரி (கடந்த வருடங்களில்) நிலுவைத்தொகையின் 12% மான தொகை தரகு (Commission) அடிப்படையிலான கொடுப்பனவாக வழங்கப்படும். அவரால் மாதாந்தம் சேகரிக்கப்படும். தரகுப் பணத்தின் 8% இனை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்பு செய்தல் வேண்டும். சபையினால் சேகரிக்கப்படும் தரகுப்பணத்தின் 12% மான தொகை ஊழியர் சேமலாப நிதியத்திற்கும், 3% மான தொகை ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் பங்களிப்பு செய்யப்படும்.
04. நியமனம் பெறும் நடுக்கட்டு உத்தியோகத்தர் ரூபா இருபத்தையாயிரத்தை (25,000.00) மீளளிக்கக்கூடிய பிணைப்பணமாக செலுத்துதல் வேண்டும்.
05. கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் "நடுக்கட்டு உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிட்டு 2021.11.16 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ கிடைக்கக்கூடியதாக "ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத்-தபாலில் அனுப்பிவைக்கவேண்டும்.
06. விண்ணப்பதாரிகள் நேர்முகத்தேர்வு மூலம் தெரிவு செய்யப்படுவார்கள். நேர்முகபரீட்சைக் குழுவின் முடிவே இறுதியானது.
07. நடுக்கட்டு உத்தியோகத்தர் பதவிக்கு நியமிக்கப்படுவோர் இப்பதவியில் கடமையாற்றியதன் அடிப்படையில் சபையின் எந்தவொரு நிரந்தர பதவிக்கான நியமனத்தையும் கோரமுடியாது.

03.11.2021

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்

(CR 5821) (3.6)

## மரண அறிவித்தல்



### திருமதி அருணாசலம் இராசம்மா

குருக்கள் குடியிருப்பு வரணியை பிறப்பிடமாகவும் கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருணாசலம் இராசம்மா அவர்கள் கடந்த (01.11.2021) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா மனோன்மணி தம்பதியரின் பாசமிகு புதல்வியும், காலஞ்சென்ற அருணாசலம் அவர்களின் அன்பு மனைவியும், கந்தசாமி (அவுஸ்திரேலியா), சௌந்தரம், நாகராசா (ஓய்வுபெற்ற உள்ளக கணக்காய்வாளர்), சந்திரா (ஓய்வுபெற்ற ஆசிரியர்), ஜெயராசா, தேவிகா ஆகியோரின் அன்புச் சகோதரியும், நந்தினி (கனடா), சிவாஜினி (ஆசிரியர்-யா/கச்சாய் மகா வித்தியாலயம்), மலைச்செல்வன் (சுவிஸ்), கலைச்செல்வன் (சிவகஜன் பதிப்பகம் - கொடிகாமம்), காலஞ்சென்ற சிவச்செல்வன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், இராகுலன் (கனடா), சக்திகுமார், நிசாந்தி (சுவிஸ்), ஒளிவதனா (ஆசிரியர்-யா/மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், அபிநயா-ஜதார்த்தன், தர்சிகா, சாருஜன், ஆர்த்திகன், சங்கவி, ராகவி, ஆதவன், அபிஷா, அபிஷேத், அபிஆரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் வில்லியம்ஸின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 5826) 1-

## மரண அறிவித்தல்

மலர்வு 17 . 03 . 1947



உதிர்வு 01 . 11 . 2021

### செபஸ்தியாம்பிள்ளை பற்றிக்

கொய்யாத்தோட்டத்தை பிறப்பிடமாகவும் முல்லைத்தீவு அளம்பில் மற்றும் சுவாமியார் வீதியினை வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்தியாம்பிள்ளை பற்றிக் கடந்த (01.11.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் செபஸ்தியாம்பிள்ளை இராசமணியின் பாசமிகு மகனும், கசில்டா ஜெயமணியின் பாசமிகு கணவரும், சீமான்பிள்ளை திவ்வியத்தின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்றவர்களான புஸ்பராணி, தனையன், இராசன், றமேஸ், பீற்றர் மற்றும் புஸ்பராசா, கிளி, ராதா, றமணி, றங்கேஸ் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்றவர்களான பொன்கிளி, அனி, சின்னக்கிளி, டொன் பொஸ்கோ மற்றும் லீலா, இராஜேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும், சலுஜா (சியாமினி), சைலஜா (டென்சியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், டின்குமார், பிரேமநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும், துஷான், டிறைக்சன், துர்ஷிகா, திருமேகன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (04.11.2021) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் இருந்து அளம்பில் முல்லைத்தீவிற்கு முற்பகல் 10.00 மணிக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 17919) 1-6

கடற்படைக்குத்...

நடவடிக்கை, மக்களின் கடும் எதிர்ப்பால் கைவிடப்பட்டது.

இலங்கைக் கடற்படையின் உத்தர மற்றும் துறைமுகத்தின் பாதுகாப்பு நிலையத்தை அமைப்பதற்காக குறித்தகாணியை அளவீட்டு திணைக்களத்தினர் நேற்றுக்காலை அளக்கச்சென்றிருந்தனர். அவர்கள், கடற்படை முகாம் அமைந்திருக்கின்ற குறித்த பகுதிக்கு வருகைதந்தபொழுது அங்கு கூடியிருந்த காணிகளின் உரிமையாளர்கள் மற்றும் வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர்களான சஜீவன், கலையமுதன், சர்வேஸ்வரன் நவரத்தினம், பார்த்தீபன் ரஜீவ்காந், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் பொதுமக்கள் காணி அளவீட்டுக்கு கடும்எதிர்ப்பை வெளியிட்டனர். அதனால், காணி அளவிடும் நடவடிக்கையைக் கைவிட்டு நில அளவைத் திணைக்களத்தினர் திரும்பிச்சென்றனர்.

(த-125)

பாரம்பரியத்தை...

வரவு- செலவுத் திட்டமொன்று இந்தமுறை சமர்ப்பிக்கப்படுமென எதிர்பார்க்கின்றேன் என்று, ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற காணொலி தொழில்நுட்பத்திலான ஊடகசந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டுக்கு வருவாயை ஈட்டக்கூடிய பொருள்கள் மற்றும் சேவைகளின் உற்பத்தி அளவை அதிகரிக்க வேண்டும். அந்தவகையில், இந்தமுறை வரவு - செலவுத் திட்டத்தில், பொருள்கள் மற்றும் சேவைகளின் அளவை அதிகரிக்கக்கூடிய வருவாய்க் கொள்கைகள் உள்ளடக்கப்பட்டிருக்கும். கிராமிய விவசாயப் பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டிய அதேவேளை, அதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான தேவை கண்டறியப்பட்டுள்ளது.

**எமது நாட்டின் மீது கண்**

எமது நாட்டின் புவியியல் இருப்பிடத்தைப் பயன்படுத்திக்கொள்ள, வலய நாடுகள் பலவும் எமது நாட்டின் மீது கண் வைத்துள்ளன. அவர்களின் பொருளாதார மறுமலர்ச்சிக்கு மாற்று மையங்கள் தேவை. அந்தப் பொருளாதார மறுமலர்ச்சிகளானவை, இதுவரை காணப்பட்ட பொருளாதாரச் செயற்பாடுகளின் ஊடாகவன்றி, பசுமைப் பொருளாதாரம், மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி வலுக்கள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் ஆளுகை போன்ற துறைகளை அடிப்படையாகக் கொண்ட தேவைகளின் அடிப்படையிலேயே உருவாகின்றன. இவைபோன்ற துறைகளுக்கு இதன்போது முன்னுரிமை அளிக்கப்படும் என்று தெரிவித்தார்.

(த)

## மரண அறிவித்தல்



தோற்றம் 04 . 04 . 1939 — மறைவு 02 . 11 . 2021

### சிவகுரு சிவபாதம்

பிள்ளையார் கோவிலடி பத்தமேனி, அச்சுவேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு சிவபாதம் அவர்கள் நேற்று (02.11.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.11.2021) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நண்பகல் 12.00 மணியளவில் பத்தமேனி தீர்த்தாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பிள்ளையார் கோவிலடி, பத்தமேனி, அச்சுவேலி.**

**தகவல்: குடும்பத்தினர். 077 77 08125**

(CS 17920) 1-6

## மரண அறிவித்தல்



தோற்றம் 14 . 06 . 1951 — மறைவு 02 . 11 . 2021

### யோகேஸ்வரன் மங்கயற்கரசி (ராணி)

தண்ணீர்தாழ்வு கட்டுவனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யோகேஸ்வரன் மங்கயற்கரசி நேற்று (02.11.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை சின்னம்மா தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்ற நாகலிங்கம் இரத்தினம் தம்பதியரின் மருமகளும், யோகேஸ்வரனின் அன்பு மனைவியும், நிமலன் (மாகாண உள்ளகக் கணக்காய்வு), கார்த்திகா ஆகியோரின் பாசமிகு தாயாரும், சோபனா, திலீபாகரன் ஆகியோரின் பாசமிகு மாமியும், அக்சயா, அக்சிதன், அக்சரன், அக்சயன், அக்சனன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், செல்வதேவி (சைவ வித்தியாவிருத்தி சங்கம்), செல்வமலர் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.11.2021) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் நண்பகல் 12.30 மணியளவில் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**0777 152 170**

**தகவல் : குடும்பத்தினர்.**

(CS 17921) 1-6

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். புதிய முயற்சிகள் அனுகூலமாக முடியும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். பொறுமையைக்கடைப்பிடிக்க வேண்டிய நாள். பிள்ளைகளால் சிறுசிறு சங்கடங்கள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது.

**மிதுனம்** : மனதில் அவ்வப்போது இனம் தெரியாத சஞ்சலங்கள் ஏற்பட்டு நீங்கும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதைக் கண்டிப்பாகத் தவிர்த்துவிடவும்.

**கடகம்:** புதிய முயற்சிகளை பிற்பகலுக்கு மேல் தொடங்குவது நல்லது. காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். தந்தையின் தேவையை பூர்த்தி செய்வீர்கள்.

**சிம்மம்:** எதிலும் வெற்றியே ஏற்படும் நாள். வாழ்க்கைத்துணையால் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த பிணக்குகள் நீங்கும்.

**கன்னி:** புதிய முய்றசிகளைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த காரியம் தாமதமானாலும் முடிந்துவிடும். கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த பிணக்குகள் நீங்கும். தாயின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும்.

**துலாம்:** தேவையான பணம் இருந்தாலும் தேவையற்ற செலவுகளும் ஏற்படும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். கடன்கள் விடயத்தில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். புதிய முயற்சிகளில் நன்கு சிந்தித்து ஈடுபடவும். நண்பர்களுக்காக செலவு செய்ய வேண்டி வரும்.

**தனுசு:** எதிர்ப்புக்களை சமாளித்து வெல்வீர்கள். மனதில் அமைதி கூடும். உடன்பிறந்தோரால் ஏற்பட்ட இடையூறு ஒன்று அகலும். குழந்தைகளால் சிறு நன்மை உண்டு. உழைப்பு பலன் தரும்.

**மகரம்:** உங்கள் உற்சாகம் மற்றவர்களையும் தொற்றிக்கொள்ளும். குடும்பத்தில் பெரியவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். தாய்வழிஉறவினர்களால் செலவுகள் ஏற்படும்.

**கும்பம்:** இன்று நினைத்த காரியத்தை எப்படியும் முடிப்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். வாழ்க்கைத்துணை உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார். அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**மீனம்:** அனுகூலமான நாளாக இருக்கும். நண்பர்கள் வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியக்கூடும். தந்தையின்மூலம் ஆதாயம் கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவும் பொருள்சேர்க்கையும் ஏற்படும்.

# மணிவிழா வாழ்த்து




**ஆசிரியை திருமதி மஞ்சுளாதேவி மகேந்திரன் (SLTS - I)**
**ஆசிரியர் பயிற்சி - கணிதம்**
**யா/செங்குந்த இந்துக்கல்லூரி**

**சேவைக்காலம்**

- யா/ வேலணை கிழக்கு மகாவித்தியாலயம் - 03.01.2000 - 13.06.2001
- யா/ பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை - 14.06.2001 - 30.06.2003
- யா/ வேலணை சரஸ்வதி வித்தியாலயம் - 01.07.2003 - 24.01.2008
- யா/ சென்மேரீஸ் வித்தியாலயம் (OLR) - 25.01.2008 - 31.01.2015
- யா/ செங்குந்த இந்துக்கல்லூரி - 01.02.2015 - 02.11.2021

**சேவைநலன் பாராட்டு**

Congratulations

மங்கலச்சிரிப்புடன் பண்பின் இலக்கணமாய்
மாண்புமிகு மகேந்திரன் அழகிய மனைவியே - மஞ்சுளாதேவியே
மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம் வாழிய வாழியவே
மனமுவர்ந்து மகிழ்வுடன் மணிக்கணக்காய்
மாசறகற்பித்த கணிதத்தின் அன்னையே - மணிவிழா நாயகி
மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம் வாழிய வாழியவே!

**03.11.2021 புதன்கிழமை ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வுபெறும் மணிவிழா நாயகி திருமதி மஞ்சுளாதேவி மகேந்திரன் அவர்களை**
*வாழ்க வாழ்க என வாழ்த்துவோர்*
**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**
**யா/ செங்குந்த இந்துக் கல்லூரி**

cs 408092(2.6)

# நாயைக் காணவில்லை



**சுன்னாகம் Super Market இற்கு அருகில் உள்ள வீதியில் படத்தில் உள்ள ஆண் நாய் 26.10.2021 மாலை 7.00மணிமுதல் காணவில்லை நிறம் உடம்பு பிறவுண் கழுத்துப்பகுதி வெள்ளை.**
கண்டுபிடித்து தருபவர்களுக்கு **ரூபா 10,000/=** வழங்கப்படும். இரகசியம் பேணப்படும்.

**T.P : 021 224 2713, 077 072 9898**

(CS 40895) (2.6)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.**
**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்**
**வெளிவாரிப் பரீட்சைகள்**
**வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறி (வெளிவாரி)**

- ❖ முதலாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை – 2019
- ❖ இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை - 2019

மேற்படி பரீட்சையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் டிசம்பர் மாதமளவில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பரீட்சைக்கு தோற்றத் தகுதியான பரீட்சார்த்திகள் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்திலோ அல்லது www.codl.jfn.ac.lk எனும் இணையத்தள முகவரியிலோ விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி பரீட்சைகளுக்கான பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதி 22.11.2021 (திங்கட்கிழமை) ஆகும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களினை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் (காலை 08.30 மணி தொடக்கம் மாலை 04.15 மணி வரை) சமர்ப்பிக்கலாம் அல்லது ப்திவுத் தபால் மூலம் அனுப்ப விரும்புவோர் கீழ்த் தரப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

**பிரதிப் பதிவாளர்,**
**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி**

மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் 021-222-3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

**பதிவாளர்**
**02.11.202**

(CR 5820 ) (3.6)

# 55 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
23
05
1942



மறைவு
03
11
1966

**வைத்திலிங்கம் தம்பி மகாலிங்கம்**
**(உதவி பொலிஸ் பரிசோதகர்)**

யாழ்/இந்துக் கல்லூரியும், யாழ் / மத்திய கல்லூரி – பழைய மாணவன், யாழ்/மத்திய கல்லூரி மாணவத் தலைவர், மெய்வல்லுநர் போட்டிகளிலும் துடுப்பாட்டத்திலும் உதைப்பந்தாட்டத்திலும் சிறந்த வீரராகத் திகழ்ந்தார். 1963 இல் யாழ்.பாடசாலைகள் இணைந்த துடுப்பாட்டக் குழுவுக்கு தலைமை தாங்கி கொழும்பு பாடசாலைகளின் இணைந்த துடுப்பாட்டக்குழுக்களுக்கு எதிராக அந்தப் போட்டியில் கூடிய ஓட்டங்களைப் பெற்று (70) பந்துவீச்சில் கூடிய 11(6+5) விக்கெட்டுக்களை வீழ்த்திய பெருமையும் இவரைச் சார்ந்தது. அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட தடகளப் போட்டியில் உயரம் பாய்தலிலும் நீளம் பாய்தலிலும் முதலிடம் பெற்றார்.

இலங்கை மெய்வல்லுநர் சங்கம் நடத்திய தேசிய மெய்வல்லுநர் போட்டியில் 1964 ஆம், 1965 இலும் உயரம் பாய்தலிலும் நீளம் பாய்தலிலும் முதலாம் இடம்பெற்று விளங்கினார். அரசாங்க திணைக்களங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டியில் உயரம் பாய்தலிலும் நீளம் பாய்தலிலும் முதலிடம் பெற்றார்.

16 4. சீனியர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

இவரின் மறைவினால்துயருறும்
V.T.லிங்கம்ஸ்
குடும்பத்தினர்.

# நீங்காத நினைவில் முதலாம் வருடம்


மண்மகிழ
26
09
1948



கண்நெகிழ
03
11
2020

கலாபூஷணம் யாழ்ரத்னா
**அந்தோனிப்பிள்ளை யோசேப் (புஸ்பராசா)**
திருமறைக்கலாமன்றம்

**அன்பின் மாமா !**



கண்களை கண்ணீர் மறைக்க நாம்
அழைத்த குரல்களும் ஓய்ந்து போக விடைபெற்று
ஈர் ஆறு மாதங்கள் ஆகிவிட்டன எம்மைக்
கண்ணீரில் ஆழ்த்திவிட்டு விண்ணகம் சென்றீரே
வேதனையால் வாடுகின்றோம் மாமா.
அன்பு நிறைமாமா உமது திருமுகம் காண
நீங்கள் செல்லும் பாதைகளில் உள்ள கோவில்களில்
சுப்பு மாமா என்ற செல்லப்பெயரால் கூவி அழைத்தும்
அதைக் கேளாதது போன்று இருக்கின்றீர்கள்
அதை நினைத்துக் கவலைப்படுகின்றோம் உங்களிடம்
ஆலோசனை கேட்டுத்தான் செயல்படுவோம்
அதையும் நினைத்துக் கவலைப்படுகின்றோம்
நீங்கள் எங்களிடம் வருவீர் என்று உமது நாமம்
பூண்டயோசேப் ஆண்டை வழிபோல் விழி
வைத்து கண்ணீருடன் உமது மருமக்களாகிய
நாம் எதிர்பார்க்கின்றோம்.
உமது ஆத்மா சாந்தியடைய அனுதினமும் இறைவனை வேண்டுகின்றோம்.

**83/11, பீச்றோட்,**
**குருநகர், யாழ்ப்பாணம்.**

உமது பிரிவால் வாடும்
**மருமக்கள்**

(cs 40891) (2.6)

# NORTH LANKA FAMILY FOODS (PVT) LTD

Rasavalli Thoddam Iyakkachchi Junction, Iyakkachchi.

## வேலை ஆட்கள் தேவை

- கணக்காளர்
- உற்பத்தி உதவியாளர்கள்
- தொழில்நுட்ப உதவியாளர்கள்
- தொழிற்சாலை சுத்திரிப்பாளர்

தொ.பே.இல.

**021 390 0900 / 070 233 2450**

(CS 40897) (3.6)

நிதி திட்டமிடல் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
வடமாகாணம்.

பாதுகாப்புச் சேவை, சுத்திகரிப்புச் சேவை தொடர்பான

## கேள்வி கோரல் 2022

01. வடமாகாண நிதி, திட்டமிடல் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் அமைச்சுப் பெறுகைக் குழுத் தலைவர் (PMPC- Major) அவர்களால் தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்களிட மிருந்து பாதுகாப்புச் சேவை மற்றும் சுத்திகரிப்புச் சேவைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

**Bid No. NP/05/02/PROC/SEC/2021**
(பாதுகாப்புச்சேவை)

| தொ. இல | மாவட்டம் | ஆளணி எண்ணிக்கை பகல் / இரவு |
|---|---|---|
| 1 | யாழ்ப்பாணம் | 20 |
| 2 | கிளிநொச்சி | 04 |
| 3 | முல்லைத்தீவு | 06 |
| 4 | மன்னார் | 04 |
| 5 | வவுனியா | 06 |
| | மொத்தம் | **40** |

**Bid No. NP/05/02/PROC/CLE/2021**
(சுத்திகரிப்புச்சேவை)

| தொ. இல | மாவட்டம் | ஆளணி எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | யாழ்ப்பாணம் | 15 |
| 2 | கிளிநொச்சி | 03 |
| 3 | முல்லைத்தீவு | 03 |
| 4 | மன்னார் | 03 |
| 5 | வவுனியா | 04 |
| | மொத்தம் | **28** |

02. கேள்வி கோரல்கள் யாவும் தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் ஊடாக மேற்கொள்ளப்படும்.

03. ஒப்பந்தம் அளிப்பிற்கு தகுதி பெற்றுக்கொள்வதற்கு கேள்வி கோரலில் வெற்றிபெற்ற விலைக் கேள்வி தாரர்கள் கறுப்புபட்டியலில் இடம்பெறாமல் இருப்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
    அ. கேள்விதாரர் வலிதான வியாபார பதிவினை கொண்டிருத்தல் வேண்டும்
    ஆ. பாதுகாப்பு சேவையினை வழங்குவதற்கான பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறப்பட்டிருத்தல் வேண்டும்

04. ஒப்பந்தம் மேற்கொள்வதற்கு மற்றும் ஒப்பந்தம் வலுப்பெறுவதற்கும், கேள்விதாரர் வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

05. ஒப்பந்த அளிப்பினை பெற்றுக்கொள்வதற்கான தகுதியினை பெற்றுக்கொள்வதற்கு குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளின் பிரகாரம் கேள்விப்பத்திரதாரர் அடிப்படைத் தகுதியினை விலைக்கேள்வித் தரவு பிரிவு – 02 இன் பிரகாரம் பூர்த்தி செய்தல் வேண்டும் .

06. தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களையும், விலைக் கேள்விப் பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் கண்டி வீதி, கைதடி எனும் முகவரியில் அமைந்துள்ள நிதி, திட்டமிடல் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, வடமாகாண அலுவலகத்தில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 14.30 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

07. தகுதிவாய்ந்த விலைக் கேள்விதாரர்கள் கேள்விப் பத்திரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பக் கடிதத்தினைச் சமர்ப்பித்து அலுவலக நாட்களில் 05.11.2021 ம் திகதி தொடக்கம் 22.11.2021ம் திகதி வரை மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப.14.30 மணிவரை வடமாகாண நிதி, திட்டமிடல் மற்றும் உள்ளூராட்சி அமைச்சில் பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு விலைக் கேள்விப் பத்திரத்திற்கும் மீளளிக்கப்படமுடியாத கேள்வி வைப்புப் பணத்தினை பின்வரும் அடிப்படையில் காசாக செலுத்தி விலைக் கேள்வி பத்திரத்தினை பெற்றுக் கொள்ளலாம்.

| தொ. இல | விபரம் | மீளளிக்கப்படமுடியாத கட்டணம் |
|---|---|---|
| 1. | பாதுகாப்புச் சேவை | 4,000.00 |
| 2. | சுத்திகரிப்புச் சேவை | 2,000.00 |

08. விலைக்கேள்விப் பத்திரங்கள் 23.11.2021ம் திகதி மாலை 14.30 மணிக்கு முன்பதாக இவ்வமைச் சில் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ சேர்ப்பிக்கப்படல் வேண்டும். பிந்திய விலைக் கேள்வி விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும். கேள்வி கோரல் விண்ணப்பங்கள் யாவும் கேள்வி கோரல் மூடியதனைத் தொடர்ந்து கேள்விதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

09. கேள்விப் பத்திரத்தில் குறித்ததுரைக்கப்பட்டவாறு விலைக்கேள்விதாரரால் விலைக்கேள்விப்பிணைப் பொறுப்பு பின்வருமாறு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்

| தொ. இல | விபரம் | தொகை ரூபா. | செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|
| 1. | பாதுகாப்புச் சேவை | 188,650.00 | 23.11.2021 - 27.02.2022 |
| 2. | சுத்திகரிப்புச் சேவை | 76,500.00 | 23.11.2021 - 27.02.2022 |

**பெயர்** : திரு.இ.வரதீஸ்வரன்
: தலைவர், பெறுகைக் குழு.
**பதவி** : செயலாளர், நிதி திட்டமிடல் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, வடமாகாணம்
**விலாசம்** : நிதி திட்டமிடல் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு (வ.மா), கண்டி வீதி, கைதடி
**தொலைபேசி** : 021-205-7112
**தொலைநகல்**: 021-205-7120

(CR35821) (3.6)

# VACANCY


THINNAI HOTEL IS LOOKING FOR COOKS (COMMIS 122)

திண்ணை ஹோட்டலிற்கு சமையலாளர் தேவை.

Send your CV to : hr@thethinnai.com

86, Palaly Road, Jaffna.
021 2030400 / 076 752 8628

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
01.08.1998

இறப்பு
05.11.2018

### அமரர் சின்னத்தம்பி தர்சீலன்


கண்ணிமைத்து விழிக்கவில்லை
மூன்று ஆண்டுகள் சென்று விட்டதையா
ஒரு நொடிப் பொழுதும்
அழியவில்லை
உங்கள் அன்பான உள்ளம்
எம்மை விட்டு....

பூதர்மடம்,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய். (cs 40902) (2.6)

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

பிறப்பு
04 . 07 . 1936



இறப்பு
31 . 10 . 2021

### சின்னத்துரை கார்த்திகேசு

சுதுமலை தெற்கைப் (எச்சாட்டி வைரவர் கோவிலடி) பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை கார்த்திகேசு கடந்த (31.10.2021) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை யோகம்மா தம்பதிகளின் சிரேஸ்ட புத்திரனும் சிவசம்பு ரத்தினம் தம்பதியினரின் ஆசைமிகு மருமகனும், செல்வராணியின் அன்புக் கணவரும், சுப்பிரமணியம், பூபாலசிங்கம் (பாலு) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், உதயகுமாரி (பிரான்ஸ்), நந்தகுமார் (சுவிஸ்), வசந்தகுமார் (கனடா), உமாவதனி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவதாசன், வனஜா, பாரதி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பத்மராணி ரத்தின சபாபதி, தனியாசலம், சிவகுமாரன் ஆகியோரின் மைத்துனனும், நிறோஜன், கீத்திகா, சிந்துஷா, ஷாருசன், சாரங்கன், சயந்தன், சிவனிஷா, அவிஷா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (05.11.2021) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS 40898) (3.6)

# மரண அறிவித்தல்



பிறப்பு 25.05.1937 — இறப்பு 01.11.2021

## அமிர்தேஸ்வரசர்மா கெங்காபவானி அம்மா

நீராவியடியைப் பிறப்பிடமாகவும் மணற்காடு காரை நகரை வசிப்பிடமாகவும் கொண்டு இல.95, மணியகாரன் வீதி கொக்குவிலில் வசித்தவருமான கெங்காபவானி அம்மா அமிர்தேஸ்வரசர்மா அவர்கள் நேற்று முன்தினம் (01.11.2021) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல் : குடும்பத்தினர்

021 222 3123

(CS 40893) (3.6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 15.03.1950



மறைவு 02.11.2021

## வேலுப்பிள்ளை சரோஜினிதேவி

யாழ்ப்பாணம் பிறவுண் வீதியைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணை முருகமூர்த்தி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சரோஜினிதேவி அவர்கள் நேற்று (02.11.2021) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் வேலுப்பிள்ளை நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற துரைசிங்கம் மற்றும் செல்வமணி, தங்கரத்தினம் (ராணி) ஆகியோரின் சகோதரியும், நீலாம்பிகை (பிரான்ஸ்), அம்பிகாபதி (சுவிஸ்), மதிவதனி, ரவீந்திரன் (சுவிஸ்), அனிதவாணி, யேசுதன் (இசை மற்றும் ஆங்கில ஆசிரியர்) ஆகியோரின் சிறிய தாயாரும், செல்வரட்ணம் (பிரான்ஸ்), தயாகரன் (பவா), சுமித்தா (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும், விஸ்னுகா, அரிசன், ரிக்கா ஆகியோரின் அம்மம்மாவும், காலஞ்சென்ற சிவலிங்கத் தின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (03.11.2021) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

சுதன் - 077 711 0523
பவா - 077 308 2640

தகவல் குடும்பத்தினர்

(CS 17913) (3.6)

# மரண அறிவித்தல்



## திருமதி இராஜதுரை வண்ணமலர்

வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜதுரை வண்ணமலர் அவர்கள் கடந்த (30.10.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறன் - தங்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகேசு - அம்மாப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற இராஜதுரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, கண்மணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிறிபாஸ்கரன், சிறிறஞ்ஜினி, சிறிவரதன், சிறிபிரகாஸ் (பிரகாஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான ஆழ்வாக்குட்டி, காசிப்பிள்ளை மற்றும் சபாரத்தினம், நவரத்தினம், கருணாவதி ஆகியோரின் அன்பு மைத்துனியும், யோகேஸ்வரன், றூத், நேசவதனா ஆகியோரின் பாசமிகு மாமியும், துவாரகா, ரூபிகா, தயாபரன், நிதர்சன், சர்மிலா, நிறோயன், தனுயன், றேச்சல், கம்சனா, கபில்தேவ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், தங்கமலர், காலஞ்சென்ற குணசேகரம் மற்றும் ரமேஸ், குணேஸ்வரி ஆகியோரின் சிறி தாயாரும், விஜி, சுகி, கவி, யசோ, ஜெகி ஆகியோரின் பெரியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.11.2021) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


பத்தினி அம்மன் கோவிலடி,
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.

தகவல்:
பிராகஸ் (மகன் )
076 375 7424

(cs 40896) (2.6)

# மரண அறிவித்தல்

பிறப்பு 10.11.1944



இறப்பு 02.11.2021

## திரு. இராயப்பு பிரான்சிஸ்

(உரிமையாளர் - சாறிசென்ரர் லூட்ஸ் பான்சி)

நாரந்தனையை பிறப்பிடமாகவும் பாண்டியந்தாழ்வு, யாழ்ப்பாணத்தை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட திரு. இராயப்பு பிரான்சிஸ் நேற்று (02.11.2021) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை இராயப்பு - அன்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான சவிரிமுத்து - லூத்தம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், ஸ்ரெலா அவர்களின் ஆருயிர் கணவரும், காலஞ்சென்ற பவுலின் மேரி மரியநாயகம் (பிரான்ஸ்), பொலின் (வளன்புரம்), றஞ்சினிதேவி (பிரான்ஸ்), ஜேசுதாசன் ஜெனற், ரோகினி (ஜேர்மனி), ராஜினி (கொய்யாத்தோட்டம்), பிறேமினி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெயந்தி (பாண்டியந் தாழ்வு), சர்மிலா (ஈச்சமோட்டை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மதியாளன் (சென் அன்ரனீஸ் கம்பியூட்டர்), ஜபீர் (கப்பிற்றல் FM) ஆகியோரின் அன்பு மாமனாரும், தேவதாசன் சிசிலியா, காலஞ் சென்றவர்களான மரியதாசன், ஜெயசுதாசன் மற்றும் ஜெயபாலன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜெயளாளன், ஜெய்சன், ஜெய்சிக்கா, சஜா, நிஜா ஆகியோரின் பேரனும், நவரெட்ணராஜா, அன்ரன், ஜேசுதாசன், விஜயன், வின்சன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், தர்சினி (லண்டன்), அருட்சகோதரி அமிர்தா (அதிபர் - திருக்குடும்ப கன்னியர் மடம்) ஆகியோரின் சிறியதந்தையும், யசோ, விஜி, நிர்மலா, ஜெறி, ஜெனின்,அனுஷா, கிறிஸ்ரியன், கிறிஸ்ரீன், டிலானி, அன்ரனி, ஸ்ரெபானி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03.11.2021) புதன்கிழமை பாண்டியந்தாழ்வு அன்னாள் ஆலயத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு திருப்பலி இடம்பெற்று நாரந்தனை சம்பேதுருவானவர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

61,கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
திரு.திருமதி மதியாளன் ஜெயந்தி
021 222 5349, 077 394 6124

(cs 40900) (2.6)

## ஒரேநாடு...

தமிழ் பேசும் கட்சிகளின் முக்கியஸ்தர்கள் ஒன்றிணைந்து, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தனியார் விடுதி ஒன்றில் நேற்றுக் கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தனர்.

குறித்த கலந்துரையாடலை ரெலோ (தமிழீழ விடுதலை இயக்கம்) ஏற்பாடு செய்திருந்தது. சுமார் 5 மணித்தியாலங்களாக நடைபெற்ற கலந்துரையாடலில், பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. அதிலேயே மேற்குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டது. எடுக்கப்பட்ட ஏனைய தீர்மானங்கள் தொடர்பில், கட்சிகள் சார்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில்,

தமிழ் பேசும் மக்கள் தொடர்ந்து சந்தித்துக் கொண்டிருக்கும் பல்வேறு பிரச்சினைகளையும் கருத்திற்கொண்டு பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. அவற்றை உடனடியாக நிறைவேற்றவேண்டும் என்ற கோரிக்கையோடு நாம் இவற்றை முன்வைக்கின்றோம்.

அதாவது, இந்த நாட்டின் அரசமைப்பிலுள்ள 13ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அத்துடன் மாகாண சபைகளுக்கான தேர்தல் விரைவாக நடத்தப்பட வேண்டும். அரசாங்கத்தாலும் அரசாங்க ஆதரவுடனும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் திட்டமிட்ட காணி அபகரிப்பு நடவடிக்கைகள் அனைத்தையும் உடனடியாக நிறுத்த வேண்டும். பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட்டு அதன்கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும்.

பல் இன, பல் மொழி, பல் மத மக்கள் வாழும் இந்த நாட்டில் ஒரே நாடு ஒரே சட்டம் என்ற கோட்பாட்டை முன்னெடுப்பதற்கும் நடைமுறைப்படுத்துவதற்குமாக அமைக்கப்பட்டிருக்கும் ஜனாதிபதி செயலணியானது, மக்களுக்கிடையில் ஒற்றுமையின்மையும் பிரிவினையையும் ஏற்படுத்தக்கூடிய பெரும் ஆபத்தைக் கொண்டுள்ளது. எனவே, அதனை திட்டவட்டமாக நாம் நிராகரிக்கின்றோம்.

எமது மக்களின் அரசியல் அபிலாசைகளை பிரதிநிதித்துவப்படுத்தி ஏனைய கட்சிகளும் கலந்துகொள்ளக் கூடியதாக எமது அடுத்த சந்திப்பு அடுத்த இரு வாரங்களுக்குள் நடத்தப்படும். என்று தெரிவித்தார்.

குறித்த கலந்துரையாடலில்,

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசிய கட்சியின் தலைவர் என். ஸ்ரீகாந்தா, தமிழ் மக்கள் கூட்டணியின் பொருளாளர் வி.பி.சிவநாதன் உள்ளிட்டவர்களோடு குறித்த கட்சிகளைச் சேர்ந்த மேலும் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (து-20,125)

## தமிழ், முஸ்லிம்களின்...

அரசமைப்பு அமையவேண்டும் என்று, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

தமிழ் பேசும் கட்சிகளின் முக்கியஸ்தர்கள் ஒன்றிணைந்து நேற்று கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தனர். யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தனியார் விடுதி ஒன்றில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது. கலந்துரையாடல் நிறைவடைந்தபின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே, ஹக்கீம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இலங்கை தமிழ் அரசுக் கட்சி என்பன பங்கு கொள்ளாமை தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார். அந்தக் கேள்விக்குப் பதிலளித்த அவர், "நாங்கள் எப்பொழுதும் அவர்களுடன் சந்தித்துப் பேசிக் கொண்டுதான் இருக்கின்றோம். இன்னும் இரண்டு வாரங்களில் இவ்வாறான சந்திப்பு நடைபெற இருக்கின்றது. ஆகவே எப்பொழுது வேண்டுமானாலும் இந்த கூட்டங்களில் அவர்கள் பங்கு கொள்ள முடியும்." - என்று அவர் மேலும் தெரிவித்தார். (து-125)

## பரீட்சைத்...

மற்றும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைகளுக்கான திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் குறித்த திகதிகளை நேற்று அறிவித்தது. அதன்படி, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2022 ஜனவரி 22 ஆம் திகதியும், உயர்தரப் பரீட்சை பெப்ரவரி 7 ஆம் திகதி தொடக்கம் மார்ச் 5 ஆம் திகதி வரையும், சாதாரண தரப் பரீட்சை மே 23 ஆம் திகதி தொடக்கம் ஜூன் முதலாம் திகதி வரையும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (து-இ)

## பொதுவாக்கெடுப்பினூடாக...

கான அரசியல் தீர்வுத்திட்டம் என்பது பரிகாரநீதியின் அடிப்படையில் பொது வாக்கெடுப்பு ஒன்றின் மூலமே காணப்பட வேண்டும்" என நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளது. அத்துடன், தாயக தமிழர் அரசியல் தரப்புக்கள் இதனை நோக்கிச் செயற்பட வேண்டுகிறோம் எனவும் தெரிவித்துள்ளது.

13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் தமிழ்பேசும் கட்சிகள் யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய கலந்துரையாடல் தொடர்பில், நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசியல் விவகாரங்களுக் கான அமைச்சு வெளியிட்ட ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ள தாவது,

2009, இனஅழிப்புக்கு முன்னராக முன்வைக்கப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்திலான அரசியல் தீர்வு, தமிழ் தேசத்தின் அரசியல் பெருவிருப்பாக அமையவில்லை என அன்றே தமிழர் அரசியல் தலைவர்கள் பலர் தெளிவாக குறிப்பிட்டுள்ளனர். இன்று 2009 இன அழிப்புக்கு பின்னராக முன்வைக்கப்படுகின்ற அரசியல்தீர்வு என்பது, முன்னரைப்போன்று இருக்க முடியாது.

காலாவதியாகிப்போன 13ஆவது திருத்தச்சட்டத்துக்கு அப்பால் சென்று, 2009க்கு பின்னரான ஈழத்தமிழர் தேசத்தின் நிலைப்பாட்டுக்கு அமைய பரிகார நீதியின் அடிப்படையில் அரசியல் தீர்வுத்திட்டம் அமையவேண்டும்.

தங்கள் தலைவிதியை தாங்களே தீர்மானிக்கின்ற வகையில், தாங்கள் எந்த அரசியல் ஏற்பாட்டுக்குள் வாழ வேண்டும் என்பதை ஈழத்தமிழ் மக்களே தீர்மானிக்கின்ற வகையில் ஒரு பொது வாக்கெடுப்பு மூலம் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். இன்றைய உலக ஒழுங்கில் இதுவே ஜனநாயக வழிமுறையாக காணப்படுகின்றது. - என்றுள்ளது. (கு)

## கந்தசஷ்டி...

முடிவு செய்யப்பட்டுள்ளது.

சுகாதாரத் துறையினரது அறிவுறுத்தலின்படி பக்தர்கள் வீடுகளில் இருந்து தரிசனம் செய்யும் பொருட்டு நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி தேவஸ்தானத்தால் உற்சவத்தில் இடம்பெறும் நிகழ்வுகள் கோவிலின் உத்தியோகபூர்வ 'யூரியூப்' தளத்தில் நேரலையாக ஒளிபரப்பப்படவுள்ளது:

ஆகையால், கந்தசஷ்டி உற்சவ காலத்தில் உற்சவ நேரங்களின்போது நாட்டின் தற்போதைய சுகாதார நடைமுறைகளின்படி பக்தர்கள் கோவிலினுள்ளும் வெளிவளாகத்திலும் ஒன்றுகூடுவதை தவிர்க்கும் பொருட்டு உற்சவ நேரங்களின்போது கோவிலுக்கு வருவதைத் தவிர்த்து வீடுகளிலிருந்து தூர தரிசனம் செய்யுங்கள் என கோவில் நிர்வாக அதிகாரி கேட்டுக்கொண்டுள்ளார். அதன்படி, நிகழ்வு களை https://www.youtube.com/channel/UCmKSI9nBdK3SRzJEpERINQ/featured என்ற தளத்தில் பார்வையிடலாம். (து-27)

## வீடமைக்க....

சால் நடைமுறைப்படுத்தப்படும் வீடமைப்புத் திட்டத்துக்கு ஒதுக்கப்படும் 10 லட்சம் ரூபா நிதியில், அரசால் வழங்கப்படும் அளவுப் பிரமாணத்துக்கு அமைய வீடுகளை அமைக்க முடியாது பயனாளிகள் திண்டாடுகின்றனர். ஆகக் குறைந்தது 20 லட்சம் ரூபா தேவை என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது கட்டுமானப் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமையாலும், அவற்றை அதிக விலைக்கு கொள்வனவு செய்யவேண்டிய நிலைமை காணப்படுவதாலும் குறித்த காலப்பகுதிக்குள் வீடமைப்பை நிறைவு செய்வது என்பது சாத்தியமில்லாதது என்று பயனாளிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அரசு வழங்கும் 10 லட்சம் ரூபாவுக்கு 550 சதுர அடியில் வீடு கட்டப்படவேண்டும். அவற்றுள் 2 அறை, ஒரு ஹோல், சமையலறை என்பன உள்ளடங்க வேண்டும்.

இதற்கு 153 பைக்கற் சிமெந்து, பல்வேறு அளவுப் பிரமாணங்களிலும் உள்ள கல், 16 கியூப் மணல், ஓடு, முகட்டு ஓடு, நிலைகள், கதவு, யன்னல், மின்சார இணைப்பு, மலசலகூடம் உள்ளிட்டவற்றை அமைப்பதற்கு தற்போதைய பெறுமதிக்கு அமைவாக 20 லட்சம் ரூபா வரையில் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் வீடு அமைப்பதற்கு மேசன் கூலி, உதவியாளர் கூலி என்று அதற்கு சுமார் 5 லட்சம் ரூபா வரையில் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு நிலையில் அரசு 10 லட்சம் ரூபாவை மாத்திரமே வழங்குகின்றது. வீட்டைப் பூர்த்தி செய்ய பயனாளிகள் கடன் வாங்கும் நிலைமையே காணப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட எங்களுக்கு வீடுகளை வழங்குகின்றோம் என்ற பெயரில் நிரந்தரக் கடனாளியாக்கும் செயற்பாடே முன்னெடுக்கப்படுகின்றது என்று குற்றம் சுமத்தும் பயனாளிகள், அதுவும் தற்போது கட்டுமானப் பொருள்களைப் பெற்றுக் கொள்வதும் சிரமமாக இருக்கின்றது என்று தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் வீடமைப்புத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டபோது மாவட்டச் செயலர்கள் துரிதமாகச் செயற்பட்டு மணலைப் பெற்றுக் கொடுத்துள்ளார்கள் எனத் தெரிவிக்கும் பயனாளிகள் தற்போது மணலுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் மாவட்டச் செயலர் அது தொடர்பில் அக்கறையற்று இருக்கின்றார் என்றும் குறிப்பிடுகின்றனர்.

இந்த நிலைமை தொடர்ந்தால் உரிய காலப் பகுதிக்குள் தம்மால் வீட்டைக் கட்டி முடிக்க முடியாது என்று சுட்டிக்காட்டுகின்றனர்.

பயனாளிகளின் அவலநிலை தொடர்பில் அதிகாரிகள் சிரத்தை எடுக்கவேண்டும் என்றும், வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநர் இந்த விடயத்தில் கவனம் செலுத்தி தங்களுக்குத் தீர்வைப் பெற்றுத் தரவேண்டும் எனவும் கோருகின்றனர். (ஒ-5)

## இணைந்த...

ணய உரிமைக்கு அவர்கள் உரித்துடையவர்கள் என்பவை ஏற்றுக் கொள்ளப்பட்டு, இணைந்த வடக்கு கிழக்கில் உயர்ந்தபட்ச சமஷ்டி அதிகார கட்டமைப்பு ஒன்றின் கீழ் ஏற்படுத்தப்படும் அதிகாரப் பகிர்வே தேசிய இனப்பிரச்சினைக்கான நிலையான தீர்வாகும்.

இவ்வாறு, நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற பல கட்சிக் கூட்டத்தில், சுகவீனம் காரணமாக விக்னேஸ்வரன் பங்குபற்றவில்லை என்றும், அவரது இந்த ஆவணத்தை, அவர் சார்பாக பேராசிரியர் வி.பி.சிவநாதன் கூட்டத்தில் முன்வைத்தார். அதில், சமஷ்டி கட்டமைப்பின் கீழ் இத்தகைய ஒரு நிலையான தீர்வை ஏற்படுத்துவதற்கு இந்தியா எல்லாவிதமான முன்னெடுப்புக்களையும் மேற்கொள்ள வேண்டும்.

அதேவேளை, குறுகிய அரசியல் இலாபம், தூரநோக்கற்ற சிந்தனை மற்றும் கடும் பௌத்த இனவாத சிந்தனை ஆகியவற்றின் அடிப்படையிலான அரசாங்கத்தின் செயற்பாடுகள் காரணமாக நாட்டில் ஏற்பட்டுள்ள ஆபத்துக்களை கவனத்தில் கொண்டும், வடக்கு கிழக்கில் போரால் மிகமோசமாக பாதிக்கப்பட்டுள்ள தமிழ் பேசும் மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யும் விதமாகவும், நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு சிங்கள குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுவதை தடுப்பதற்கும், அரசியல் அமைப்பில் ஏற்கனவே இருக்கின்ற 13ஆவது திருத்தச் சட்டத்தை அதன் ஆரம்ப நிலையில் இருந்தவாறு முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு இந்தியா காலதாமதம் எதுவுமின்றி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தற்போதைய நிலைமையில் மலையக மக்களும் முஸ்லிம் மக்களும் வாழும் இடங்களில் மாகாணசபைகளை உடனே ஏற்படுத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கின்றோம். - என்று விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார். (கு)

## அரிசிக்குத்..

அமைச்சர் சமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கண்டி தலதா மாளிகையில் நடைபெற்ற பூஜை ஒன்றின் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாண் சாப்பிடுவதைவிட மரவள்ளிக் கிழங்கு, பாசிப் பயறு சாப்பிடுவதில் எந்தப் பாதிப்பும் ஏற்படாது எனவும் மரவள்ளிக் கிழங்கு புற்று நோய்க்கு சிறந்த மருந்து எனவும் தெரிவித்தார்.

எமது நிலங்களில் மரவள்ளிக் கிழங்கு சிறப்பாக வளரும். 60க்கும் மேற்பட்ட தேசிய கிழங்கு வகைகள் இருக்கின்றன. பாசிப்பயறு , கௌப்பி போன்ற பயிர்கள் இருக்கின்றன. இவற்றை உணவுக்காக எடுப்பதை பழக்கமாக்கிக் கொள்ள வேண்டும். - என்று மேலும் தெரிவித்தார். (கு)

# இந்திய அணிக்குள் இருவேறு பிரிவுகள்

## அதனால்தான் தொடர் தோல்விகளென பாக். முன்னாள் வீரர் அக்தர் விளாசல்

**டுபாய், நவ. 3**

**இந்திய அணிக்குள் பிளவு ஏற்பட்டுள்ளது. கோலிக்கு எதிராக ஒரு பிரிவினரும், கோலிக்கு ஆதரவாக ஒரு பிரிவினரும் செயற்படுகிறார்கள் எனத்தகவல் கிடைத்துள்ளது என்று பாகிஸ்தான் அணியின் முன்னாள் வேகப்பந்துவீச்சாளர் அக்தர் பரபரப்புத் தகவலை வெளியிட்டுள்ளார்.**



இந்திய அணியின் தோல்விகள் தொடர்பில் அக்தர் மேலும் தெரிவிக்கையில்:

இந்திய அணிக்குள் பிளவு ஏற்பட்டிருக்கலாம் என்று நினைக்கிறேன். இந்திய அணிக்குள் இரு பிரிவுகள் செயற்படுகின்றன. ஒரு பிரிவு வீரர்கள் கோலிக்கு ஆதரவாகவும், ஒரு பிரிவு வீரர்கள் கோலிக்கு எதிராகவும் செயற்படுகிறார்கள் என நினைக்கிறேன். இது தெளிவாகத் தெரிகிறது.

எதற்காக இந்தப் பிளவு ஏற்பட்டது என எனக்குத்தெரியாது. ஒருவேளை ரி-20 அணிக்கு கோலி கடைசியாக தலைவராக இருப்பதால்கூட இந்தப் பிளவு இருக்கக்கூடும். அல்லது கடந்த 2 போட்டிகளில் சில தவறான முடிவுகளை எடுத்துவிட்டார் என்பதால் இருக்கலாம். எது உண்மை எனத் தெரியவில்லை. கோலி மிகச்சிறந்த வீரர். ஒவ்வொருவரும் அவரை மதிக்கிறோம்.

நியூஸிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் இந்திய அணி நாணயச் சுழற்சியில் தோல்வி அடைந்தவுடனே வீரர்கள் அனைவரும் மனரீதியாக நம்பிக்கையிழந்துவிட்டார்கள். தோல்வி அடைந்தபின் விமர்சிப்ப தில் என்ன தவறு இருக்கிறது.

விமர்சனங்கள் முக்கியமானவை. ஏனென்றால் நியூஸிலாந்துக்கு எதிராக மோசமான கிரிக்கெட்டை இந்திய அணியினர் விளையாடி யுள்ளார்கள், தவறான மனநிலையுடன் இருந்துள்ளார்கள். இந்தத் தோல்விக்குப்பின் ஒவ்வொருவரின் தலையும் கவிழ்ந்தது. என்ன செய்ய வேண்டும் என்பது யாருக்கும் தெரியவில்லை.

நாணயச் சுழற்சியில் தோல்வி அடைந்தபோது, இந்திய அணி போட்டியில் தோல்வி அடையவில்லை என்பதை நினைக்க மறந்துவிட்டார்கள். இதை மனதில் வைத்து நம்பிக்கையுடன் திட்ட மிட்டுச் செயற்பட்டிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும். ஆனால், எந்த வி தமான திட்டமிடலும் இந்திய அணியிடம் இல்லை - என்றார். (ம)



# தலைவராகிறார் கே.எல்.ராகுல்?

புதுடில்லி, நவ. 3

இந்தியா - நியூஸிலாந்து அணிகளுக்கு இடையிலான ரி-20 தொடரில் கே.எல்.ராகுல் தலைவராக நியமிக்கப்படலாம் என்று கருதப்படுகின்றது.

ரி-20 உலகக்கிண்ணத் தொடர் முடிந்த பின்னர் இந்திய அணி நியூஸிலாந்துக்கு சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளது. இந்தத் தொடரில் முக்கிய வீரர்களுக்கு ஓய்வு வழங்க இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை திட்ட மிட்டுள்ளது. இதனால் ராகுலின் தலைமையில் இந்திய அணி களமிறங்கும் என்று கருதப்படுகின்றது. (ம)

**வான்கோழி சேவல்கள்**

இறைச்சிக்கு ஏற்ற வான் கோழி சேவல்கள் விற்பனைக்கு உண்டு. உயிர் எடை kg 900

**Rani Farm 0773322433** (CS 17916) (1/6)

**வேலையாள் தேவை**

வயோதிபப் பெண்ணை பராமரிக்கவும் வீட்டில் தங்கி நின்று வீட்டு வேலைகள் செய்யக்கூடிய பணிப்பெண் தேவை.

**077 278 4590 / 077 932 2822** (CS 40901)(3.6)

## சகிப் அல் ஹசன் திடீரென விலகல்!

டாக்கா, நவ. 3

ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் இருந்து விலகியுள்ளார் பங்களாதேஷ் அணியின் சகலதுறை வீரரான சகிப் அல் ஹசன்.

பங்களாதேஷ் அணி இறுதியாக மேற்கிந்தியத் தீவுகளுடன் விளையாடிய போது. இந்த ஆட்டத்தில் சகிப் அல் ஹசனுக்குக் காயம் ஏற்பட்டது. இதையடுத்தே அவர் தொடரில் இருந்து விலகியுள்ளார். (ம)



# நாமும் மனிதர்கள்தான் எமக்கும் ஓய்வு தேவை!



டுபாய், நவ. 3

6 மாதங்களாக தொடர்ந்து கிரிக்கெட் விளையாடுகிறோம், பயோபபுள் சூழலில் இருக்கிறோம். எங்களுக்கும் ஓய்வுதேவை என்று இந்திய அணியின் வேகப்பந்துவீச்சாளர் ஜஸ்பிரித் பும்ரா தெரிவித்துள்ளார்.

நியூஸிலாந்திடம் தோல்வியடைந்த இந்திய அணி கிட்டத்தட்ட தொடரில் இருந்து வெளியேறும் நிலைக்குச் சென்றுவிட்டது. இந்த நிலையிலேயே பும்ரா இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

**உண்மையிலேயே சிறிது ஓய்வு தேவைப்படுகிறது. குடும்பத்தைப் பிரிந்து வாழ்கிறோம், 6 மாதங்களாகத் தொடர்ந்து கிரிக்கெட் விளையாடுகி றோம், பயோபபுள் சூழலில் இருப்பதால் எங்களுக்கு மீண்டுவர** ஓய்வு தேவை. நன்றாக விளையாட வேண்டும் என்று மனதில் நினைத்திருந்தா லும், களத்தில் இறங்கும் போது அதைப்பற்றிச் சிந்திக்க முடியாது. எங்கள் கட்டுப்பாட்டில் பல விஷயங்கள் நடக்காது. அனைத்துமே எந்தச் சூழலில் விளையாடுகிறோம், எப்போது விளையாடுகிறோம் என்பதில்தான் பட்டியலிடப்படுகின்றன. நீண்டகாலமாகக் குடும்பத்தை விட்டு பிரிந்திருப்பது, பயோபபுள் சூழலில் இருப்பது போன்ற வீரர்களின் மனதில் பாதிப்பை ஏற்படுத்தும். இருப்பினும் எங்களை நல்லமுறையில் வைத்திருக்கவே பி.சி.சி.ஐ. நிர்வாகம் முயன்று வருகிறது. இப்போது நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் காலம், நேரம் கடினமானது - என்றார். (ம)

**வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை**

சகல நாடுகளுக்கும் மிக குறைந்த கட்டணத்தில் பொதிகள் அனுப்பிட

**UK 950/=**

**திருமுருகன் கொம் நெற்**

**321 K.K.S.Road, Jaffna. 077 755 4528** (CS 17915) (3.6)

**சந்நிதி முருகன் ரான்ஸ் போட்**

வடமாகாணத்தில் உள்ள எந்த மாவட்டத்திலும் பழைய காட்போட் மட்டைகள் மற்றும் அச்சக கழிவுப் பேப்பர்கள், கொப்பி, புத்தகங்கள் மற்றும் அச்சக அலுமினிய பிளேட்டுகள் அனைத்தும் சிறந்த விலைக்கு தங்களது இடத்திற்கே வந்து கொள்வனவு செய்யப்படும்.

**உரிமையாளர் தொடர்பிற்கு : ர.திலீபன்**

**077 112 0982 / 077 022 6449** (CS 40843) (3.6)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் மானிப்பாய் சமுர்த்தி வங்கி வீதியில் 3 1/4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. நிலப்பரப்பு, 1 1/2 பரப்பில் ஒரு துண்டும் 1 3/4 பரப்பில் ஒரு துண்டும் பரப்பாக பிரிக்கப்பட்டநிலையில் 14 அடி பாதையுடன் மருதடி விநாயகர் கோவிலில் இருந்து 700M தூரம்.

**பார்வையிடும் நேரம்** :காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை.

- தரகர் தேவையில்லை.
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**077 814 7389**
**077 614 7333** (CS 17914) 1/6



பத்திரிகை. நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.11.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.